Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only founation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/942)
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 27 வெள்ளிக்கிழமை (14.10.2011) பக்கங்கள் 16 ஓசை – 14



பூனைகள் தீவு

11




இலங்கைக்கு இரண்டாமிடம்

07



தந்தையின் பணி தொடரும்...

08



ஒருபோதும் சரணடையேன்

14

## வியட்னாம் ஜனாதிபதி இலங்கை வருகை



வியட்னாம் ஜனாதிபதி ரௌஙடான் சென்ங் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றைய தினம் இலங்கை வந்தடைந்தார். பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இராணுவ மரியாதையுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வியட்நாம் ஜனாதிபதியை வரவேற்றார். வியட்நாம் ஜனாதிபதியுடன் வர்த்தக குழு

(15 ஆம் பக்கம் பார்க்க)

# பட்ஜெட்டிற்குப் பின்னரே தெரிவுக்குழு அமைப்பு

வரவு செலவுத்திட்ட யோசனை முன்வைக்கப்பட்ட பின்னர் புதிய பணிப்புரையுடன் கூடிய நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கில் அரசாங்கத்தினால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதற்கு பல்வேறு கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. இதனையடுத்து நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைப்பதற்கான யோசனை பிற்போடப்பட்டிருந்தது. இந்நிலையில் 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட யோசனை முன்வைக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனை முன்வைக்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. சகல மக்களும் தத்தம் அடையாளங்களை பாதுகாத்து கௌரவத்துடனும் பாதுகாப்புடனும் ஒரு தேசத்தவர்களாக வாழ்வதை உறுதிசெய்யும் அரசியல் யாப்புக்கான வழிகாட்டல் சட்டத்தை அமைக்கக் கோரும் பிரேரணைக்கான அறிவித்தல் அடுத்த வார நாடாளுமன்ற அமர்வில் பேசப்படவுள்ளது.

இவ்வாறான பிரேரணை சபாநாயகரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இது அடுத்த நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளதென அமைச்சரும் சபைத் தலைவருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். இந்த பிரேரணைக்கான அறிவித்தலில் அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, வாசுதேவ நாணயக்கார, டி.யூ.குணசேகர, பசில் ராஜபக்ஷ, ரவூப் ஹக்கீம், அநுர பிரியதர்சன யாப்பா, டக்ளஸ் தேவானந்தா, சம்பிக்க ரணவக்க, பி.பியசேன, ரி.பி.ஏக்கநாயக்க, எம்.பி.ரஜீவ விஜேசிங்க, ஆறுமுகம் தொண்டமான், திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

## இணைந்து செயற்பட ஐ.நா.விற்கு அழைப்பு



(கொழும்பு)

எதுவித பாரபட்சமும் இன்றி இலங்கையுடன் இணைந்து செயற்படுமாறு ஐக்கிய நாடுகள் சபைக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

பிரான்ஸிற்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர், தலைநகர் பாரிஸில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு இலங்கை தொடர்பில் நியாயமற்ற, அடிப்படையற்ற குற்றச் சாடடுக்களை முன்வைத்துள்ளது. அத்துடன் இந்த அறிக்கை நீதியான முறையில் தயாரிக்கப்படவில்லை. பக்கச்சார்பான இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஐ.நா. நிபுணர்குழு தனது அறிக்கையை தயாரிக்க சான்றுகள் பெறப்பட்ட விதமானது இலங்கை மீது பாரிய குற்றச்சாட்டுக்கள் இல்லை என்பதை நிரூபித்துள்ளது.

30 வருடகால யுத்தம் குறித்து இனந்தெரியாத குழு தகவல் வழங்குமாயின் அதனை வைத்துக் கொண்டு விசாரணை நடத்த முடியாது என வெளிவிவகார அமைசசர் குறிப்பிட்டுள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் உரிமைமீறல் மனு தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் புதிய விதிமுறைகளை சேர்த்துக்கொள்ளும் வகையில் ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதென அறிவிக்கக் கோரி உயர்நீதிமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாககல் செய்த அடிப்படை உரிமைமீறல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட பின்னர், தடுப்புக்காவலில் உள்ளவர்களை தொடர்ந்து தடுத்து

(15 ஆம் பக்கம் பார்க்க)

## முதற்கட்டமாக 40 பாடசாலைகள் வட மாகாணத்தில் அபிவிருத்தி

மகிந்த சிந்தனையின் கீழ் 1000 பாடசாலை அபிவிருத்தித்திட்டத்திற்கு அமைவாக வடமாகா ணத்தில் முதற்கட்டமாக 40 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக வடமாகாண கல்வித் திணைகளத்தின் திட்டப்பணிப்பாளர் கே.ஜெ.பிரெட்லி தெரிவித்தார்.

வடமாகாணத்தில் குறித்த பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 100 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அனுமதிக்கப்படடிருந்தது. இத்தொகையை அதிகரிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினால வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் (15 ஆம் பக்கம் பார்க்க)

## எல்லைகள் மறுசீரமைப்பு விடயத்தில் மக்களின் உணர்வுகளுக்கே முன்னுரிமை



பிரதேச செயலகங்களுக்கிடையில் எல்லைகள் மறுசீரமைப்பு விடயத்தில் சம்பந்தப்படுகின்ற பிரதேசம் கிராமங்களின் மக்களினுடைய பெரும்பான்மையான கருத்துக்களுக்கும் அவர்களின் உணர்வுகளுக்குமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுமென ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலும் மாலை உடுவில் பிரதேச செயலகத்திலும் இடம்பெற்ற எல்லைகள் மறுசீரமைப்பு தொடர்பான மக்களின் அபிப்பிராயங்கள் கருத்துக்கள் கோரும் கூடடத்தில் தலைமைவகித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபரின் அவதூறு குற்றச்சாட்டு ஆசிரிய மாணவர்கள் மனு கையளிப்பு



பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபராலோ அல்லது உயர்மட்ட அதிகாரிகளாலோ, விரிவுரையாளர்களாலோ எங்களுக்கு எந்தவிதமான பாலியல் துஷ்பிரயோகங்களும், வார்த்தைப் பிரயோகங்களும், துன்புறுத்தல்களும் இடம்பெறவில்லை என்பதை மிக உறுதியாக கூறுகின்றோம் என தம்மீது அரச அதிபரால் சுமத்தப்பட்டுள்ள பாலியல் அவதூறு குற்றச்சாட்டைக கண்டித்து அரச அதிபருக்கென நேற்று யாழ். செயலக நிர்வாக அலுவலரிடம் கையளித்த கண்டன மகஜரில் பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## பிளவுபட்டுள்ள ஜே.வி.பி.அணிக்கு விடுதலைப் புலிகள் நிதியுதவி

(கொழும்பு)

ஜே.வி.பி.யில் பிளவுபட்டுள்ள பிறேம்குமார் குணரட்ணம் தலைமையிலான அணியினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதாகத் தெரிவித்து தேசிய புலனாய்வுச் சேவை விசாரணையில் ஈடுபட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களிடம் இருந்து பிறேம்குமார் குணரட்ணம் அணியினருக்கு நிதியுதவி கிடைத்துள்ளதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாகவே விசாரணை நடவடிக்கைகளில் தேசிய புலனாய்வுச்சேவை ஈடுபட்டுள்ளது.

இந்த அணிக்கு கனடா மற்றும ஸ்கண்டினேவிய நாடுகளில் இருந்து விடுதலைப் புலிகளின் தொடரபுகள் மூலம் பணம் கிடைத்துள்ளதாக தேசிய புலனாய்வுச் சேவை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த அணியில் உள்ள இரண்டு முக்கிய பிரமுகர்களான திமுது ஆட்டிக்கல, வருண ராஜபக்ஷ

(15 ஆம் பக்கம் பார்க்க)

# அவசர திருத்த வேலைகளுக்காக மின்சாரம் தடைப்படும் இடங்கள்

அவசர திருத்த வேலைகளுக்காக நாளைய தினம் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கோண்டாவில், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, ஆனைக்கோட்டை, நவாலி, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டாதெரு, கோம்பயன்மணல் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை யாழ். குடாநாடு முழுவதும்,

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# நாடு எவ்வாறு ஆளப்பட வேண்டுமென்பதை வாக்குரிமையே உறுதிப்படுத்துகின்றது

## யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

வாக்களிப்பது நம் அனைவரினதும் அடிப்படை உரிமை சம்பந்தப்பட்ட விடயமாகும். இவ் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதன் மூலமே எமது நாடு எப்படி ஆளப்பட வேண்டும். ஆள்வதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கும் தகுதியுடையவர்களாக மாறுகின்றோம் என யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் கருணாநிதி தெரிவித்தார்.

மனித உரிமை தொடர்பான கூட்டம் நேற்றைய தினம் 3.00 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் மண்டபத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

யுத்த நிலை, இடப்பெயர்வு, கல்வி அறிவின்மை, அக்கறையின்மை, வாக்கின் பெறுமதியை உணர்ந்து கொள்ளாமை போன்ற காரணங்களினால் பலர் வாக்குரிமையை இழந்து விடுகின்றார்கள்.

வாக்குரிமையை பெறுவதற்கு ஒருவர் தன்னை வாக்காளராகப் பதிவு செய்தல் அவசியமானது. எனினும், ஒவ்வொரு வருடமும் தாமே முன்னின்று பதிவு செய்வதுடன், தனது பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கின்றதா எனவும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

அதேவேளை, வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்படாதவிடத்து பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றது.

நாம் இடம்பெயர்ந்தவர்களாக இருந்தால் நஷ்டஈடு பெறுவதற்காகவோ அல்லது எமது பல்கலைக்கழக அனுமதிக்காகவோ தனது வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காகவோ வாக்காளர் இடாப்பில் பெயர்களை பதிவு செய்திருத்தல் கட்டாயமான தொன்றாகும்.

வாக்களிப்பது எமது அடிப்படை உரிமை வாக்குரிமையைத் தடுக்கும் எவர்மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள எமக்கு அதிகாரம் இருக்கின்றதென்பதையும் மறுக்க முடியாது. எதுவாயினும் எமது வாக்குரிமையின் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

வாக்காளராக பதிவு செய்வதற்கு இலங்கை பிரஜையாகவும், 18 வயதைப் பூர்த்தியடைந்தவராகவும், வசிப்பதற்கான ஒரு வீடு இவை போன்ற காரணிகளால் வாக்குரிமை பெறமுடியும்.

இடம்பெயர்ந்தோர் மற்றும் மீள் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்கள், மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்கள் போன்ற இடங்களிலும் வாக்காளர் பதிவுகளை பூரணப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் வசிப்பவர்கள், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தமது பதிவுகளை சொந்தப் பிரிவுகளில் மேற்கொள்ள விரும்பினால் அதற்கான விசேட படிவம் வடிவமைக்கப்பட்டு கிராம அலுவலரிடம் விநியோகிக்கப்படுகின்றது.

சென்ற வருடம் வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் 2011 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பில் மேன்முறையீட்டின் மூலம் இக்காலத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றார். (எஸ்)

# வாக்காளர் இடாப்பில் பதியுமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்பொழுது குடாநாட்டில் வசிக்காதவர்களும், வெளிநாடுகளில் வசிப்பவர்களும் வாக்காளர் இடாப்பில் பதிவதற்கான நடவடிக்கைகள் தேர்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

வாக்காளர் இடாப்பு சம்பந்தமான விண்ணப்பப் படிவங்களை கிளிநொச்சி, யாழ்ப்பாணம் தேர்தல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை கிராம அலுவலரிடம் உறுதிப்படுத்தி எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். (எஸ்)

# தேசிய வாசிப்பு மாத போட்டிகள் நாளை

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் போட்டிகள் நாளை சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல் லூரி மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இதில் சித்திரப்போட்டி காலை 8.30 மணிக்கும், கட்டுரைப் போட்டி காலை 10.30 மணிக்கும், ஆங்கில எழுத்துப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கும் அதே கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பித்த மாணவர்கள் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு பிரதம நூலகர் சு.வித்தியானந்தன் அறிவித்துள்ளார். (உ-11)

# சிறுவர் தினக் கொண்டாட்டம் கிளிநொச்சியில் இன்று

மாபெரும் சிறுவர் தினக் கொண்டாட்டம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்.மாவட்டங்களின் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இன்று காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகாமையாளர் ஏ.ரஞ்சித் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்விற்கு லயன்ஸ் கழக திருநெல்வேலி வட்டம் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் இணைந்து அனுசரணை வழங்குகிறது. மேலும் இதில் பங்கு பற்றும் சிறுவர்கள் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (52)

# பயிற்சிநெறி

காரைநகரில் இயங்கும் தொழில் பயிற்சி நிலையத்தில் தகவல் தொழில்நுட்பம், கட்டட நிர்மாணம் ஆகிய இரு பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் நாளை 15ஆம் திகதிக்கு முன், தொழில் பயிற்சி நிலையம், வலந்தலை, காரைநகர் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (104)

# ‘பக்தியின் மொழி தமிழ்’ இன்று வெளியீட்டு விழா

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய ‘பக்தியின் மொழி தமிழ்’ எனும் நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் வரவேற்புரையும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையினையும், ‘வலம்புரி’ பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம் வெளியீட்டுரையினையும், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ச. சந்திரசேகர் அறிமுகவுரையையும் நிகழ்த்தவுள்ள அதேவேளை நூலின் நயப்புரையை பேராசிரியர் தி.வேலம்நம்பி ஆற்றவுள்ளார். (54)

# ஒத்திவைப்பு

யாழ்.பிரதேச செயலகத்தில் நாளைய தினம் மாலை 2.00 மணிக்கு நடைபெறவிருந்த யாழ்ப்பாண பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுகூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக, பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் கே.கே.சிவச்சந்திரன் அறிவித்துள்ளார்.

# யாழ்.பொலிஸாரின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் தலைமை அலுவலகத்தினால் மாபெரும் நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் பல், இரத்ததானம், கண் பரிசோதனை, கண்ணாடி வழங்குதல், திருமணப்பதிவு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் உட்பட அடையாள அட்டைப் பதிவு என்பன மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையம் அறிவித்துள்ளது.

இதில், அனைத்து மக்களும் சமூகமளித்து தமது குறைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (எஸ்)

## நீதிமன்றச் செய்திகள்

# ஐயாயிரம் அபராதம்

திருநெல்வேலிப் பகுதியில் அனுமதியின்றி அரச சாராயம் விற்பனை செய்த நபர் ஒருவருக்கு யாழ்.நீதவான் நீதிமன்றம் 5000 ரூபா தண்டம் விதித்துள்ளது.

கோப்பாய் பொலிஸாரினால் நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கினை விசாரணை செய்த நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த குற்றவாளிக்கு இத்தண்டத்தை விதித்துத் தீர்ப்பளித்தார். (பா)

# சட்டவிரோத மணலை ஏற்றியவருக்கு ஐம்பதாயிரம் ரூபா அபராதம்

வரணி நாவற்காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தினால் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் நேற்று அதிகாலை கொடிகாமம் பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பில் ஈடுபட்டபோது சட்டவிரோதமாக மணல் ஏற்றிய சாரதியையும், உழவு இயந்திரத்துடன் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்த 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், செலுத்தத் தவறின் 6 மாத சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், வாகனத்தையும், பெட்டியையும் 20 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 5 இலட்சம் ரூபா பிணை முறியையும் நிறைவேற்றி எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டதுடன் சான்றுப்பொருட்களான மணலைப் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார்.

வாகன உரிமை தொடர்பான விசாரணையை எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து தீர்ப்பளித்தார். (உ-11)

## வாழ்க வளமுடன்

### தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்

பெயர் : சரணிகா ராஜ்குமார்,
முகவரி: இன்பருட்டி,
பருத்தித்துறை.



Happy Birthday!

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

பிணி வருவதற்கு முன், மூப்பு உண்டாவதற்கு முன், புத்தி மங்கி மறைவதற்கு முன், சாவு நெருங்குவதற்கு முன், உடல்நலத்துடன் இருக்கும்போதே செய்யவேண்டிய நல்ல நல்ல காரியங்களைச் செய்.

- அறிஞர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஆயுதத் தலையீடற்ற அரசியலுக்கு!

கடந்த சனிக்கிழமை உள்ளூராட்சித் தேர்தல்கள் தினத்தன்று முல்லேரியாவில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த இரு பிரிவினருக்கிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் முன்னாள் பிரதியமைச்சரும் ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பிரிவிற்கான பணிப்பாளரும் ஆலோசகருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை செய்யப்பட்டார்.

விருப்பு வாக்குத் தேர்தல் முறையினால் ஏற்பட்ட மற்றுமொரு துரதிஷ்டவசமான சம்பவம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. அந்தப் பிரதேசத்தின் அரசியல் தலைமைத்துவத்தைக் கைப்பற்றும் போட்டியே துப்பாக்கிச் சூட்டுக்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு நிச்சயமாக கடும் தண்டனை வழங்கப்படும் எனவும் அரசாங்கம் கூறியுள்ளது. அதே சமயம், கொலன்னாவைப் பகுதியில் போதைப்பொருள் வர்த்தகம் பெருமளவில் நடைபெறுவதாகவும், அதன் விளைவே இந்த மோதலும் கொலையும் என அப்பகுதியில் வெளியான சில துண்டுப்பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேமச்சந்திரவின் தலையில் தானும் சுட்டு, தனது பாதுகாப்பு ஊழியர்களையும் சுடுமாறு உத்தரவிட்டதாகச் சொல்லப்படும் கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா இன்னமும் ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கிறார். மருத்துவமனை வளாகத்தில் அவரது ஆதரவாளர்களும், பாதுகாப்பு ஊழியர்களும் காத்திருக்கிறார்கள். அவர் மீது பதில் தாக்குதல் ஏதும் நிகழலாம் என்ற பரபரப்பு இன்னமும் காணப்படுகிறது.

கொலைச் சம்பவம் தொடர்பாக ஆறுபேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். துமிந்த சில்வாவைத் தொடர்ந்து பிரேமச்சந்திர மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர், துமிந்தவின் பாதுகாப்புக் கடமையில் இருந்த அனுர துஷார டி மெல் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் மற்றும் இருவர் இந்தியாவுக்குத் தப்பியோடியிருந்த நிலையில், அங்கு கைதுசெய்யப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், பிரேமச்சந்திரவின் படுகொலைக்கு பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவே பதில் சொல்ல வேண்டுமென ஆளுங்கட்சி அமைச்சர்களில் ஒருவரான வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டிருக்கிறார். கடந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் குறிப்பாக துமிந்த சில்வாவின் வெற்றிக்காக பாதுகாப்புச் செயலாளர் தேர்தல் மேடைகளில் தீவிர பிரசாரம் மேற்கொண்டிருந்தார்.

“அண்ணன் பாடுபட்ட கட்சிக்குள்ளேயே அவர் கொலை செய்யப்பட்டுள்ளார். எங்களுக்கு நியாயம் வேண்டும்” என்று பிரேமச்சந்திரவின் சகோதரியும், தனது தந்தைக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிரான போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தப்போவதாக மகள் ஹிருணிக்காவும் தெரிவித்துள்ளனர். இறுதிக்கிரியை நிகழ்வில் ஹிருணிக்காவின் உணர்ச்சிகரமான உரை, அவர் அரசியலில் குதித்து தந்தையின் ஆதரவுத் தளத்தைப் பயன்படுத்திக் கொள்ளப்போவதை உணர்த்துகிறது.

உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து இரண்டாண்டுகள் நான்கு மாதங்களும் கடந்துவிட்ட நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இத்தனை ஆயுதங்களும் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பும் தேவைதானா என்ற கேள்வி எழுந்துள்ளது. தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களினால் பெருமளவானோர் கொல்லப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் நடைமுறையிலிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இனி தளர்வு செய்யப்பட வேண்டும்.

வர்த்தகச் செயற்பாடுகள், வாகனக் கொடுக்கல் வாங்கல்கள் போன்றவற்றில் ஈடுபடும் அரசியல்வாதிகளும் கூட தமது பாதுகாப்புக்காக இராணுவ வீரர்களுடன், தனிப்பட்ட பாதுகாப்பிற்காக பாதாள உலகக் கும்பல்களைச் சேர்ந்தவர்களையும் வைத்திருப்பதற்கான சந்தர்ப்பத்தை இனி வழங்கவேண்டியதில்லை. இராணுவத்தினரும் படிப்படியாக ஆயுதங்களைக் குறைத்துக் கொள்வதன் மூலம், நாம் போர் ஓய்ந்த அமைதி ஜனநாயகச் சூழலை முழுமையாக அனுபவிக்க முடியும்.

முதலில், 83 களுக்கு முன்னிருந்த சுதந்திரமான அரசியற் சூழலை நாம் இங்கு மீளவும் கொண்டுவரவேண்டும். அரசியல்வாதிகளுக்கு வழங்கப்படும் மிகையான ஆயுதப் பாதுகாப்புக்களையும் படைத் தலையீடுகளையும் இப்போதிலிருந்து மெல்ல மெல்லக் குறைப்பதன் மூலமே இலங்கையில் ஆயுதத் தலையீடற்ற அரசியலைக் கட்டியெழுப்ப முடியும்.

- ஆசிரியர் -

# ஒரு மில்லியனாக அதிகரிக்கும் இலங்கையில் இணையத்தள பயன்பாடு

(கொழும்பு)

இலங்கையில் இணையதளம் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை இந்த வருட இறுதிக்குள் ஒரு மில்லியனாக அதிகரிக்கும் என தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இணையதளம் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நூறு வீதத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையால் அதிகரித்துள்ளதென ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ் பெல்பிட்ட தெரிவித்துள்ளார். 2009 ஆம் ஆண்டில் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட இணையதள பயன்பாட்டாளர்கள் நாட்டில் இருந்ததாகவும் அந்த எண்ணிக்கை இந்த வருடத்தின் ஜூன் மாதமளவில் ஆறு இலட்சத்து 96 ஆயிரம் வரை உயர்ந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இணையதள வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக டொங்கிள்களை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையே இந்த முன்னேற்றத்திற்கான காரணம் என தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

2009 ஆம் ஆண்டு சுமார் 61ஆயிரம் பேர் டொங்கிள்களைப் பயன்படுத்தியதாகவும் அந்த எண்ணிக்கை இந்த வருடம் ஜூன் மாதத்தில் மூன்று இலட்சத்து 67 ஆயிரமாக உயர்ந்துள்ளதெனவும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டளவில் இலங்கையில் டொங்கிள்களை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை 40 இலட்சம் வரை உயர்த்துவதற்கு எண்ணியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

3ஜீ தொழிநுட்பம் விஸ்தரிக்கப்பட்டமை, கட்டணங்கள் குறைக்கப்பட்டமை மற்றும் தொலைத் தொடர்பு உபகரணங்கள் மீதான வரிகள் நீக்கப்பட்டமை என்பன இந்தத் துறையின் முன்னேற்றம் காரணமாக அமைந்துள்ளதென தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## ஆசிரியர் சிறுவர் கௌரவிப்பு விழா

(ஆனைக்கோட்டை)

வலிதென்மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசமும், முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் ஆசிரியர், சிறுவர் கௌரவிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு வலிதென்மேற்கு பிரதேச சபை மண்டத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவர் எம்.எக்ஸ்.சர்வானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி.ஜெயா தம்மையா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்கிறார். (104)

## உத்தேச தேர்தல் முறைமையை அரசு அமுல்படுத்த வேண்டும்

### திஸ்ஸ அத்தநாயக்க



(கொழும்பு)

உத்தேச தேர்தல் முறைமையை அரசாங்கம் தற்போதேனும் அமுல்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். விருப்பு வாக்கு அரசியல் காரணமாக குரோத அரசியல் கலாசாரம் உருவாகியுள்ளது வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஒருவரை ஒருவர் கொலை செய்கின்றனர்.

விருப்பத் தெரிவு மற்றும் தொகுதிவாரித் தேர்தல் முறைமையொன்று உருவாக்குவது குறித்த உத்தேச யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட்டு நீண்ட காலம் கடந்துள்ள போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை தேர்தல் முறைமையை மாற்றி யமைப்பது குறித்து நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தினால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவளிக்கும்.தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்த உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு நாணயங்களுடன் இந்தியப் பிரஜை கைதானார்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நாணயங்களை நாட்டிலிருந்து எடுத்துச்செல்வதற்கு முற்பட்ட இந்தியப் பிரஜை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை சென்னைக்குச் செல்வதற்கு தயாராகியிருந்த போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதாக விமான நிலைய சுங்கப் பிரிவு அறிவித்துள்ளது. சந்தேகநபரின் பயணப் பொதியிலிருந்த சில இலத்திரனியல் உபகரணங்களுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக சுங்க அதிகாரிகள் கூறினர்.

ஜப்பான் யென்,கனேடிய டொலர்,குவைத் டினார், சிங்கப்பூர் டொலர், கட்டார் ரியால், சவூதி ரியால், சுவிஸ் ப்ராங்க் உள்ளிட்ட நாணயத்தாள்கள் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற் றப்பட்ட வெளிநாட்டு நாணயத்தாள்களின் பெறுமதி சுமார் ஒன்றரைக் கோடி ரூபா என மதிபபிடப்பட்டுள்ளது. சந்தேகநபரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விமானநிலைய சுங்கப் பிரிவு குறிப்பிட்டுள்ளது

## சட்டவிரோதமான சிகரெட்டுடன் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஒரு தொகை சிகரெட்டுக்களை இலங்கைக்குக் கொண்டுவந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 70 ஆயிரம் சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக விமான நிலைய சுங்கப் பிரிவு அறிவித்துள்ளது.

சந்தேகநபர் நேற்று அதிகாலை குவைத்திலிருந்து நாட்டை வந்தடைந்துள்ளார். கைப்பற்றப்பட்ட சிகரெட்டின் பெறுமதி சுமார் 10 இலட்சம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

## புதிய ரயில் சமிக்ஞை கட்டமைப்பு




(கொழும்பு)

புதிய ரயில் சமிக்ஞை கட்டமைப்பொன்றை அமைப்பதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஓமந்தையிலிருந்து பளை வரையும் பளையிலிருந்து காங்கேசன்துறை வரையும், மதவாச்சியில் இருந்து மடுபாதை வரையும், மடுவில் இருந்து தலைமன்னார் வரையும் இந்த சமிக்ஞை கட்டமைப்பு அமைக்கப்படவுள்ளது.

புதிய சமிக்ஞை கட்டமைப்பை அமைப்பதற்கான திட்டத்திற்கென் பணிப்பாளர் ஒருவரும் நியமிக்தப்பட்டுள்ளதாக ரயில்வேத் திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமர சிங்க தெரிவித்தார். இது குறித்து ஆராய்வதற்கான விசேட குழுவொன்றும் ரயில்வே பொதுமுகாமையாளரால் நியமிக்கப்பட்டுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அனைத்து நடவடிக்கைகளும் போக்குவரத்து அமைச்சரின் ஆலோசனையின் பேரிலேயே முன்னெடுக்கப்படுவதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி மலையாளபுரத்தில் பொதுநோக்கு மண்டபம் திறப்பு

(கிளிநொச்சி)


கிளிநொச்சி மலையாளபுரத்தில் கடந்த யுத்தத்தினால் சேதமடைந்த பொதுநோக்கு மண்டபம் தற்போது மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பதினொரு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் கலந்துகொண்டு இம் மண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றும்போது, கடந்த காலங்களில் அபிவிருத்தியில் பாரபட்சம் காட்டப்பட்ட இவ்வாறான பிரதேசங்களின் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும். மேலும் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள தொண்டு நிறுவனம் ஒன்று இக் கிராமத்தில் விசேட அபிவிருத்தி வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது. அதற்காக அந் நிறுவனம் இக்கிராமத்தில் தனது தேவை பகுப்பாய்வினை முடித்து வேலைத்திட்ட அனுமதிக்காக ஜனாதிபதி செயலனிக் குழுவின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதனை விரைவுபடுத்திப் பெற்று வேலைகளை முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் மக்கள் எதிர்நோக்குகின்ற பெருமளவு பிரச்சினைகள் தீர்க்கப்படும். மீள்குடியேற்றத்திற்காக அன்று மக்கள் இப்பிரதேசங்களுக்கு வந்த போது இருந்த நிலைமையோடு தற்போதைய நிலைமையினை ஒப்பிட்டுப் பார்த்தால் முன்னேற்றம் மிகத் தெளிவாகப் புரியும் என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட பதினைந்து விவசாயிகளுக்கு தெளிகருவிகளையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன், பிரதித் திட்டப் பணிப்பாளர் அமலராஜ், மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் விஜயகிருஸ்ணன், இராணுவப் பொறுப்பதிகாரி கேணல் ஜெயதிஸ்ஸ, கிராம அலுவலர்கள், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



## பருவகால மழை ஆரம்பம் இடம்பெயர்ந்த மக்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

வன்னியில் தற்போது ஆரம்பித்துள்ள மாரி மழையினால் நிரந்தர வீடுகள் இல்லாத மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வாழ்ந்து வரும் நிலையில் வீட்டுத் திட்ட வசதிகள் கிடைக்காத மக்கள் தற்காலிக கொட்டகைகளிலும், குடிசைகளிலுமே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்கள் வெயில் காலங்களில் சிரமமின்றி வாழ்ந்து வந்த நிலையில் தற்போது ஆரம்பித்துள்ள மழையினால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, வெள்ள நீர் தேங்கி நிற்பதால் அங்கு வாழ முடியாத இந்த மக்கள் உறவினர்களின் வீடுகளிலே வாழ்ந்து வருவதாகவும் இதனால், சிறுவர்களும் முதியவர்களும் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, கோரன்கட்டு, பன்னங்கண்டி, தேவிபுரம், உடையார்கட்டு ஆகிய கிராமங்களிலுள்ள மக்களே இவ்வாறு பாதிப்புக் களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த மழையினால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படும் அபாயம் நிலவுவதாகவும் அத்துடன் தொற்று நோய்கள் மற்றும் டெங்கு நோய்பரவும் அபாயமும் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-கே)

## அபராதம் விதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்மடுநகர் நாவல்நகர் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றனத்தினால் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் 116 போத்தல் கசிப்பை விற்பனை செய்த குற்றத்துக்காக கிளிநொச்சி பொலிஸார் குறித்த நபரை கைது செய்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.


வழக்கை விசாரித்த நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்ததுடன் செலுத்தத் தவறின் 8 மாத சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (உ.கே)


## காணிப் படிவங்களை சமர்ப்பிக்கவும்

(முழங்காவில்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் மண்ணின் மகிமை (பிம் செவிய) திட்டத்தின் கீழ் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளில் காணிப் படிவங்களைச் சமர்ப்பிக்காத காணி உரிமையாளர்கள் உடனடியாக சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மட்டுவில்நாடு மேற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ளவர்கள் இன்று கிராம சேவை அலுவலகத்திலும், ஞானிமடம் கிராம சேவை பிரிவில் உள்ளவர்கள் நாளை சனிக் கிழமை ஞானிமடம் கிராம சேவகர் அலுவலகத்திலும் ஒப்படைக்குமாறு அப் பகுதி கிராம சேவையாளர் ம. இராச கோபாலன் அறிவித்துள்ளார். (உ-112)





சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் கைப்பணிப் பொருட்கண்காட்சி நிகழ்வில் முன்பள்ளி மாணவர்களால் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் மற்றும் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. பாக்கியராஜா ஆகியோர் இணைந்து கண்காட்சிக் கூடத்தை நாடாவெட்டி திறந்துவைப்பதையும் காணலாம். (11)

## மண்டைதீவு கிராமத்தில் இம்முறை மேலும் 100 ஏக்கரில் நெற்செய்கை

(மண்டைதீவு)

மண்டைதீவுக் கிராமத்தில் இவ்வருடம் மேலும் 100 ஏக்கர்காணியில் நெற்செய்யையை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மண்டைதீவு கமக்கார அமைப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து இப்பிரதேசத்திலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் விவசாயச் சங்கத்தில் நெல் பயிரிடுவதற்கான அனுமதி கோரி' பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

பதிவுகளை மேற்கொண்டுள்ளவர்கள் பயிரிடும் காணிகளின் உரிமத்தை உறுதிபடுத்தி கமநல உத்தியோகத்தர் ஊடாக சமர்பிக்குமாறு அந்த பகுதி கமக்காரர் சங்க வட்டாங்கள் அறிவித்துள்ளன. குத்தகைச் செய்கையாளர்கள் காணி உரிமையாளர்களின் அனுமதிக் கடிதத்தை கிராம அலுவலர் மூலம் உறுதிப்படுத்தி சமர்பிக்குமாறு சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு ஏக்கர் அல்லது அதற்கு குறைவான இடப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபடுவோருக்கு விதைநெல் உரம், கிருமிநாசினி என்பன வழங்கப்படும்.

இதேவேளை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்டு வரும் தடுப்பணை மற்றும் கழிவுநீர் வாய்கால் வேலைகளுக்கு மேலதிகமாக கிராஞ்சி குளம் மற்றும் சம்புக்குளம் என்பவற்றை ஆழமாக்கும் பணியையும் மழைகாலத்திற்கு முன் செய்து தருமாறு விவசாயிகள் விவசாய அமைப்புகளையும், வேலணை பெரும்பாக உத்தியோகத்தரையும் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக வேலைகள் ஆரம்பித்துள்ளதாக கமக்காரர் சங்க தலைவர் தெரிவித்துள்ளார். (23)

## வடமாகாண தமிழ் இலக்கிய பெருவிழா மன்னாரில் இன்று கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழா இன்றும் நாளையும் மன்னார் நகர சபை மண்டபத்தில் கோலாகலமாக ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகும் முதலாம் நாள் மாலை நிகழ்வு சவரியான் லெம்பேட் அரங்கில் மன்னார் அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகவும், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ச. மோகனநாதன், மன்னார் உதவி மாவட்ட செயலாளர் எம். பரமதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் மன்னார் நாட்டிய கலார்ப்பண மன்றத்தின் (தசாவதாரம்) நடனம், வவுனியா திருமறைக்கலாமன்றத்தின் கிராமிய நடனம், மன்னார் நாட்டிய நர்த்தனாலய மன்றத்தின் பரதநாட்டியம், கிளிநொச்சி கலைவாணி கலாமன்றத்தின் அபிநயப்பாடல், யாழ். நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையின் புஸ்பாஞ்சலி, மன்னார் பற்றிமா மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் மீனவ நடனம் மற்றும் பல்வேறு பாடசாலை மாணவர்களின் கோலாட்டம், ஒயிலாட்டம், கரகம் மற்றும் மன்னார் புனித ஆனாள் கலாமன்றத்தின் அபிமன்யு வதை, மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் செங்கோலின் அஸ்தமனம் நாடகம், பூநகரி கலாசாரப் பேரவையின் செம்பு நடனமும் இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பமாகும் 2ஆம் நாள் மாலை நிகழ்வு பெஞ்ஜமின் செல்வம் புலவர் அரங்கில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாணிப அமைச்சர் ரிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், மன்னார் அரசாங்க அதிபர் நா. வேதநாயகன், மன்னார் நகர பிதா ச. ஞானப்பிரகாசம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் மன்னார் நாட்டிய கலார்ப்பண மன்றத்தின் ஜதிலய நடனம், மன்னார் ஸ்ரீசாகித்திய நடனப்பள்ளி மாணவர்களின் நடன சங்கமம், ஏழாலை அபிநயா கலாலயத்தின் கிராமிய நடனங்களின் சங்கமம் மற்றும் வவுனியா திருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் வர்ணம் ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து சிறந்த நூல் தேர்வுக்கான பரிசில்களும் கௌரவ ஆளுநர் விருது வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (உ-112)

# பாரம்பரிய கலைகளை வளர்க்க மாணவர் சமூகம் முன்வரவேண்டும்

## நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி கிருஸ்ணவேணி

(யாழ்.நிருபர்)

மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் பாரம்பரியக் கலை வடிவங்களை வெளிக்கொண்டு வரவேண்டும். மன அழுத்தங்களைப் போக்கவல்ல கலைகளை பாடசாலைக் காலத்திலேயே இளைய தலைமுறையினர் கற்றுக்கொள்ள வேண்டும் என யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி தெரிவித்துள்ளார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று பாடசாலைகளில் கல்வி பயிலும் எல்லா மாணவர்களும் புறப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்குபற்ற . வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளின் ஊடாகவே சிறந்த தலைமைத்துவத்தை வளர்த்துக்கொள்ள முடியும்.

தமிழ் மக்களின் பாரம்பரியக் கலை வடிவங்களான காவடி, கும்மி,கோலாட்டம், மகுடி, விவசாய நடனம், மீனவ நடனம் போன்ற பல்வேறு கலைவடிவங்களை ஒன்றிணைத்து இசை நடன ஆசிரியைகளின் நெறியாள்கையில் மாணவிகள் நல்லதோர் நடன நிகழ்ச்சியினை மிகச் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

ஏனைய கல்லூரிகளும் மாணவர்களிடம் மறைந்து கிடக்கும் கலை வடிவங்களை வெளிக கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி விக்ரோறியன் நவரட்ணம் சுதாகரன் யாழ். குடாநாட்டின் தரைக் கீழ் நீர்வளப் பாதுகாப்பு என்ற பொருளில் நினைவுப் பேருரையை நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எக்கரசு உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (10)

# யாழ். மானிப்பாய் வீதியில் துருப்பிடித்த பழைய இரும்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, முஸ்லீம் வட்டாரத்தில் பழைய இரும்புகள் அதிகளவில் தேங்கிக் கிடப்பது பொதுமக்களின் அன்றாடச் செயற்பாடுகளுக்கு பல்வேறு இடையறுகளை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



யாழ். மாநகரசபைக்குட்பட்ட இவ்வீதிப் பகுதிகளில் உணவுச் சாலைகள், குளிர்பான நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் என் பன அமைந்துள்ளது.

இந்த நிலையில் இவ்வாறுதேங்கிக் கிடக்கும் இரும்புகளுக்குள் குப்பைகளும் கொட்டப்பட்டுவருவதாகவும் இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதை விட போக்குவரத்துக்களும் இதனால் தடைப்படுவதாகவும் குறிப்பாக வாகனங்கள் செல்லும் போது ஒன்றை ஒன்று விலத்தி போக முடியாத நிலை காணப்படுவதாக்வும் தெரிவிக்கப்படுகிறது. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து செயற்படுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (உ-105)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கோரல்

(யாழ். நிருபர்)

தீவகக் கல்வி வலயத்தில் மீளத் திறக்கப்படவுள்ள மூன்று பாடசாலைகளின் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வேலணை ஆத்திசூடி வித்தியாலயம், சுருவில் றோ.க.த.க. பாடசாலை புங்குடுதீவு மேற்கு அ.மி.த. பாடசாலை என்பனவே மீளத் திறக்கப்படவுள்ள பாடசாலைகளாகும்.

இப்பாடசாலைகளின் அதிபர் பதவிக்கு தீவக வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து இலங்கை ஆசிரியர்சேவை தரம் 1 தரம் 2:1 ஆகியவற்றைச் சேர்ந்த தீவகக் கல்வி வலய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக்கல்வி அறிவும் அனுபவமும் விருப்பத்தக்கது என்றும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

# பேருந்துத் தரிப்பிடம் இன்றி சிரமத்துக்குள்ளாகும் பயணிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் பயணிகள் தரிப்பிடம் எதுவுமில்லாததால் இப்பிரதேச மக்கள் மரநிழல்களின் கீழ் நின்றே தமது பயணத்தை மேற்கொள்ளவேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

தற்போது பருவ மழை ஆரம்பித்துள்ள நிலையில் பேருந்துக்காகக் காத்திருக்கும் பயணிகள் கடைகளிலும், கட்டடங்களிற்கு கீழ் நிற்பதால் சில சந்தர்ப்பங்களில் பேருந்துகளை தவற விட்டு கால்நடையாகச் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேருந்து மத்திய நிலையத்திலிருந்து நாளாந்தம் 2 ஆயிரம் பயணிகள் பயணம் செய்து வரும் நிலையில் பஸ் தரிப்பிடம் அமைக்கப்படாமையால் இந்த மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இம் மாவட்டத்தில் பேருந்து மத்திய நிலையம் அமைக்கப்படாது மக்கள் சிரமங்கள் குறித்து பல தடவை சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் இதுவரை அதற்கான எந்த வித முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை. எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (உ-கே)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(14.10.2011 – வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்
புரட்டாதி 27 ஆம் நாள்.
இராகுகாலம் 10.32–12.02, சுபநேரம் 6.02 –7.32,
நட்சத்திரம்: பரணி பி.இ.12.53 வரை
திதி: துதிய்ய மு.ப. 11.58 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணம் வரும், குடும்பத்தில் நிம்மதி, இனசன நெருக்கம் ,தேக ஆரோக்கியம், உற்சாகம்.

ரிஷபம:– வீண் அலைச்சல், பணமுடை, தூரத்துத்துக்க சேதி, சகோதர வெறுப்பு, பயண நட்டம்.

மிதுனம் :–பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, காரிய சித்தி, உடற்பலம், தவறான முடிவு.

கடகம்:– குடும்பத்தில் கவலை, பணகஷ்டம், இனசன உதவி, எதிர்பாராத துன்பம், வீண் அலைச்சல்.

சிம்மம்:– பணம் வரும், குடும்பத்தில் குதூகலம், இனசனகொண்டாட்டம், வாக்குவாதம், வீண் சர்ச்சை.

கன்னி :– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம்,சகோதரவெறுப்பு, சங்கடமான மன நிலை, விபத்து வரக்கூடும்.

துலாம் :–பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, சகோதர பாசம், குழப்பமடைதல், எதிர்பாராத கவலை.

விருச்சிகம்– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், முகவசீகரத்தால் நன்மை, செல்வம் சேரல், வீண் கோபம்.

தனுசு:– பணக் கஷ்டம், வீண் கவலை, அவசரமுடிவு, இனசன நெருக்கம், விபத்து வரலாம்.

மகரம:– குடும்பத்தில் நன்மை, பணம் வரும் மூத்தோர் ஆசி, உள்ளத்தில் மகிழ்ச்சி, சுபகாரியச் செலவு.

கும்பம் :– பணக் கஷ்டம், வீட்டில், சேதம், குடும்பத்தில் கவலை, தான தர்ம சிந்தனை, அவசர முடிவு.

மீனம் :– குடும்பத்தில் மகிழ்ச்சி பணம் வரும், விருந்துபசாரம், சுபகாரியச் செலவு, உல்லாசப் பயணம்.

# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுதல் நிறுவனத்தின் அனுசரணையில் மருதங்கேணி கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட மீள்குடியேற்றம் நடைபெற்ற பாடசாலைகளில் க.பொ.த. (ச/த)தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான கருத்தரங்கும், செயலமர்வும் நடைபெறவுள்ளன.

யாழ். செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, யாழ். மருதங்கேணி இ.த.க. பாடசாலை, யாழ். வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், போன்ற பாடசாலைகளில் மேற்படி செயலமர்வு இடம் பெறுவதுடன் இதில் உடுத்துறை மாவித் தியாலயம், ஆழியவளை, தி.சி. பாடசாலை, போன்ற பாடசாலை மாணவர்கள் பங்கு கொள்ள வுள்ளனர். அத்துடன் மொத்தமாக 5 பாடசாலைகள் இதில் பங்கு கொள்கின்றன.

மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குச் செயலமர்வு ஒக்டோபர் 18ஆம், 20ஆம் திகதிகளிலும், மற்றும் ஒக்டோபர் 25, 27ஆம் திகதிகளி லும், நவம்பர் 1,3ஆம் திகதிகளி லும், மேற்கூறிய பாடசாலைகளில் நடைபெறும் என யாழ். மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி க.பொன்னையா தெரிவித்துள்ளார். (116)

# புனரமைக்கப்பட்டுவரும் பன்னங்கண்டி ஆறு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பன்னங்கண்டி ஆற்றின் புனரமைப்புப் பணிகள் நேற்று டனிஸ் அகதிகள் பேரவையால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது. கிளிநொச்சி மாவட்டத்தின் கஷ்டப்பிரதேசத்திலுள்ள இவ் ஆற்றின் கழிவு நீர் பகுதிகள் விவசாய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்தமையால் இவ் ஆற்றின் நீர் கொள்ளவு பிரதேசம் குறைவடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு மேற்படி பேரவை இந்த ஆற்றினை புனரமைப்பு செய்ய முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆற்றினை 10 அடி அகலத்தில் அகற்றி புனரமைப்புச்செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-கே)



இந்து கலாசார உத்தியோகஸ்தர் எஸ். உதயபாலன் தலைமையில் இந்து கலாசார அமைச்சினால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சியில் பங்கு பற்றிய ஐயனார் வித்தியாலய மாணவர்கள் மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களையும் காணலாம்.

# தேசிய மட்ட மைலோ கால்பந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி தகுதி

(மானிப்பாய்)

மைலோ வெற்றிக்கிண்ணத்திற்கான கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் தேசிய மட்டப் போட்டியில் விளையாடும் தகுதியை 19 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி அணிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையே மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி தேசிய மட்டப் போட்டியில் விளையாடவுள்ளது.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் சளைக்காது மோதிக்கொண்டன. இந்நிலையில் போட்டியில் சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் இரு அணிகளும் மோதிக்கொண்ட நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்து இரு அணிகளும் புதுவேகத்துடன் களமிறங்கி மோதிக்கொண்டன. இரண்டாம்பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றியீட்டியது.

# கோட்ட மட்ட கால்பந்து வெற்றியீட்டிய அணிகள்

(சங்கானை)

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டித் தொடரின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டிகள் 13, 16, 18 வயதுப் பிரிவு ஆண்கள் அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான் போட்டியில் முதலாமிடத்தை யாழ்ப்பாணக் கல்லூரியும், இரண்டாமிடத்தை அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை அராலி இந்துக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் முதலாமிடத்தை வட்டு இந்துக் கல்லூரியும், இரண்டாமிடத்தை வட்டு மத்திய கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியும் பெற்றுக் கொண்டன.

கோட்ட மட்டப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகள் வலய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்தனர்.

# வடமாகாண கராத்தே இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கராத்தே வீர, வீராங்கனைகளுக்கான கராத்தேப் போட்டி இன்று முதல் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கராத்தே சம்மேளனத்தின் ஒழுங்குபடுத்தலில், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளுக்கான கராத்தேப் போட்டி இன்று முதல் மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள வீர, வீராங்கனைகள் நேற்றே யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளதாகவும், யுத்தம் முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மிகப் பெரிய கராத்தே சுற்றுப் போட்டி இது எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# சிநேகபூர்வ கிரிக்கெட் ஸ்ரான்லி அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் ஸ்ரான்லி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் லோட்டர்ஸ் அணிக்கும் யாழ். ஸ்ரான்லி அணிக்குமிடையிலான சிநேக பூர்வமாக 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி ஒன்று இடம்பெற்றது.

இப்போட்டி யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஸ்ரான்லி அணி 30 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதன் 52, வினோஜன் 46, தர்சன் 25, சுதர்சன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அபிநாத் மூன்று, தயாசுதன், கார்த்திக், டினேஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு லோட்டர்ஸ் அணி, வெற்றிக்காக இறுதி வரை போராடிய போதும் வெற்றியிலக்கை அடையவில்லை. இறுதியில் 30 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத்தழுவியது. இதில் ஜெயறூபன் அணியின் வெற்றிக்காக இறுதி வரை போராடியபோதும் பலன் கிடைக்கவில்லை. சிறப்பான முறையில் ஜெய றூபன் 106 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் சிறிசிரணவன் 32, அபிநவன் 21, சிறிஜெயகுமார் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கம்சிசாத், சுதர்சன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

புதிதாக கடினப் பந்துப் போட்டியில் ஆடி ஆரம்பித்துள்ள லோட்டர்ஸ் அணியினர் பல்வேறு சிநேகபூர்வ போட்டிகளிலும் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.. (42)

## விளையாட்டுச் செய்திகள்

# மாவட்ட கரப்பந்து விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினர் நடத்தவுள்ள ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடர் விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

ஆண், பெண் என இருபாலருக்குமிடையில் நடைபெறவுள்ள இப்போட்டியில், பங்குகொள்ள விரும்பும் அணிகளை பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

போட்டியில் பங்குகொள்ளவுள்ள அணிகள் 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள செயலரின் இல்லத்தில் விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக அவற்றினைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கரப்பந்தாட்ட சங்கத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# சிமிக் வெற்றிக் கிண்ண ருவென்ரி 20 அரையிறுதிக்கு தகுதிபெற்ற அணிகள்

(யாழ்ப்பாணம்)

சிமிக் வெற்றிக் கிண்ண ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு மானிப்பாய் பரீஸ், கடற்படை, கொக்குவில் கே.சீ.சீ., ஜொலிஸ்ரார் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ். படைகளின் தலைமையக மற்றும் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து நடத்தும் பொதுமக்கள் - படையினர் நல்லுறவை இணைக்கும் சிமிக் வெற்றிக் கிண்ண ருவென்ரி 20 கிரிக்கெட் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் முதலாவது காலிறுதிப் போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி நியூஸ்ரார் அணியை வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுது.

இரண்டாவது காலிறுதிப் போட்டியில் இலங்கை கடற்படை அணி சென்றலைட்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மூன்றாவது காலிறுதிப் போட்டியில் கே.சீ.சீ. அணி ஈகிள்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

நான்காவது காலிறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி, ஜொனியன்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அரையிறுதிப் போட்டிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய நான்கு அணிகளும் மிகப் பலம் பொருந்திய அணிகளாகக் கருதப்படுகின்றன.

இந்த வகையில் இப்போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக அமையும் என ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். (07)

# கால்பந்து முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிகளுக்குமிடையிலான நட்புறவு கால்பந்துப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 14, 16, 18, 21 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம் பெற்றது.

இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் சிறப்பான முறையில் ஆடியதால் போட்டியில் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை.

இறுதியில் இப்போட்டி சமநிலையில் நிறைவுபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியிலும் இரு அணி வீரர்களால் கோல் எதனையும் போட முடியாமல் போக ஆட்டம் சமநிலையில் நிறைவுபெற்றது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி மகாஜனாக் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

21 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (93)

# செயலக அணிகளுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான அரசாங்க வெள்ளிக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடர் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ள போட்டியில் கச்சேரி அணியும், கோப்பாய், சாவகச்சேரி, தெல்லிப்பளை, சண்லிப்பாய் ஆகிய பிரதேச சபை அணிகள் மோதவுள்ளன.

இப்போட்டிகளுக்கான முழு ஏற்பாடுகளும் பூர்த்தியாகவுள்ளதாகவும், போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு அரசாங்க அதிபர் வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டார்கள் தெரிவித்தனர்.

அத்துடன் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அணிகளை குறித்த நேரத்திற்கு போட்டி இடம்பெறும் இடத்திற்கு வந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (93)

# சென்றலைட்ஸ் சொக்ஸ் வெற்றி



(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் போட்டி ஒன்றில் கோப்பாய் ஐக்கியம் 'பி' அணியை சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழகம் 301ஏ அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடர் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் கோப்பாய் ஐக்கியம் 'பி' அணியும், சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியும் மோதின.

சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி 42-30 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மின்னொளியில் தினமும் 6.00 மணிக்கு இப்போட்டிகள் ஆரம்பமாவதால் அதிகமான கூடைப்பந்தாட்ட ரசிகர்கள் ஆட்டத்தைக் கண்டு மகிழ்வதை அவதானிக்க முடிகின்றது.

நான்கு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில், நான்கு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்றுக் கொள்ளும் அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றும் என்பது குறிப்பிடத்தக்கது. (93)

# இன்றுடன் நிறைவுபெறும் தெற்காசிய விளையாட்டு

## பதக்கப் பட்டியலில் இலங்கை இரண்டாமிடம்

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டையில் நடைபெற்று வரும் முதலாவது தெற்காசிய கடற்கரை விளையாட்டு விழாவின் பதக்கப்பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்திலுள்ளது.

கடந்த 8ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் இவ்விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு இன்றைய தினம் நிறைவடையவுள்ளது.

இதன் படி ஐந்தாம் நாள் முடிவுகளின் படி, பதக்கப் பட்டியலில் இந்தியா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

இதன் இறுதி நாள் இன்றாகும். ஐந்தாம் நாள் முடிவு வரை பதக்கப பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.

இந்தியா 7 தங்கம், 8 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களுடன் முதலாம் இடத்திலும், இலங்கை 6 தங்கம், 8 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளன.

Hambantota 2011
1st South Asian Beach Games
"Our sun to shine on you"

4 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களுடன் பாகிஸ்தான் மூன்றாம் இடத்திலும் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்களுடன் பங்களாதேஷ் நான்காம் இடத்திலும் ஒரு தங்கம், 5 வெண்கலப் பதக்கங்களுடன் ஐந்தாம் இடத்திலும் மாலைதீவுகள் ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களுடன் ஆறாம் இடத்திலும் இருக்கின்றன.

# அதிர்ச்சியே அதிகம் ஹர்பஜன் ஆதங்கம்

(புதுடில்லி)

இங்கிலாந்துக்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் இருந்து என்னை நீக்கியது வேதனையை விட ஆச்சரியமே அதிகம் அளித்தது என்று ஹர்பஜன்சிங் தெரிவித்தார்.

கடந்த எனது 13 ஆண்டுகால கிரிக்கெட் வாழ்க்கையில் அணிக்காக ஏதாவது செய்யாமல் எப்படி நீடிக்க முடியும். என்னை விட எனது ஆட்டத் திறமை குறித்து யாருக்கு அதிக அக்கறை இருக்க முடியும். எனது அணி என்னிடம் இருந்து எதை எதிர்பார்க்கிறதோ? அதனை நான் செய்துள்ளேன். எனது பந்துவீச்சு குறித்து சிலர் விமர்சிப்பதற்காக அவர்கள் நினைக்கிற படி நான் என்னை மாற்றிக் கொள்ள முடியாது. தற போது நான் முழு உடல் தகுதியுடனும், முழு வலிமையுடனும் உள்ளேன். எனது சிறந்த ஆட்டத் திறனை வெளிப்படுத்த தயாராக இருக்கிறேன்.


எனது தொடக்க கால கட்டங்களில் டெண்டுல்கர், கும்பிளே, கங்குலி ஆகியோர் எனக்கு உதவிக்கரமாக இருந்தனர். அது போன்று இளம் வீரர்களுக்கும் நான் ஆதரவாக இருப்பேன் எனவும் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்கா தொடரிலிருந்து பிரெட்லீ நீக்கம்

(சிட்னி)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான ஒரு நாள் மற்றும் ருவென்ரி 20 தொடரிலிருந்து வேகப் பந்து வீச்சாளர் பீரெட்லி நீக்கப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

பிரெட்லீக்கு குடல்வால் அழற்சி ஏற்பட்டுள்ளதால் இதற்கு விரைவில் சத்திரசிகிச்சை செய்யவுள்ளதாலேயே அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளது. இத்தொடருக்கான வெற்றிக் கிண்ணத்தை டோனி மற்றும் குக் ஆகியோர் அறிமுகம் செய்து வைப்பதைக் காணலாம். இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது போட்டி இன்றைய தினம் ஹைதராபாத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தகுதிகாண் போட்டி வெனிசுலா வெற்றி



(பியூர்ட்டோ லாக்ரஸ்)

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டி ஒன்றில் ஆர்ஜன்ரீன அணியை வெனிசுலா அணி வீழ்த்தியுள்ளது.

2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடக்கான தென் அமெரிக்க கண்ட அணிகளுக்கிடையிலான தகுதிகாண் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் வெனிசுலாவின் பியூர்ட்டோ லாக்ரஸ் நகரில் நடைபெற்ற போட்டி ஒன்றில் வெனிசுலா அணியும், ஆர்ஜன்ரீன அணியும் மோதின.

இதில் சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்திய வெனிசுலா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

உள்ளூர் ரசிகர்களின் முன்னிலையில் சிறப்பான வெற்றியைப் பதிவாக்கியது மகிழ்ச்சி என போட்டியின் பின் வெனிசுலா அணித் தலைவர் தெரிவித்தார்.

# சர்வதேசச் சவால்களை முறியடிக்கும் சக்தி கடற்கரை விளையாட்டின் மூலம் நிரூபணம்

(அம்பாந்தோட்டை)

சகல சர்வதேச சவால்களையும் முடியடிக்கும் சக்தி எமக்கு இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தும் மேலும் ஒரு நிகழ்வாகவே தற்போது அம்பாந்தோட்டை யில் நடைபெற்று வரும் தெற்காசிய கடற்கரை விளையாட்டு விழாவை நான் பார்க்கின்றேன் என்று விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமே தெரிவித்துள்ளார்.



முதலாவது தெற்காசிய விளையாட்டுப போட்டியினை முன்னிட்டு நடைபெற்ற முத்திரை வெளியிடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டிக்கான தீர்மானம் நவம்பர் 11 ஆம் திகதி இடம்பெறவுள் ளது. இதற்கு இன்னும் ஒரு மாதங்களே உள்ளன. இதனை முன்னிட்டு இலங்கைக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் தெற்காசிய விளையாட்டு விழா அமைந்துள்ளது. இதன் மூலம் சகல சர்வதேச சவால்களையும் முறியடிக்கக்கூடிய சக்தி எமக்கு உள்ளது என்பதனை நிரூபிக்க சந்தர்ப்பத்தை நான் பார்க்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 2ஆவது சுற்றில் பெட்ரா



(டோக்கியோ)

ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்றுக்கு செக்குடியரசின் பெட்ரா செட்கோவ்ஸ்கா தகுதி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் ஜப்பானின் எரிகாலை எதிர்கொண்ட பெட்ரா செட்கோவ்ஸ்கா நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

# குற்றமற்றவர்களென நிரூபிக்கவேண்டும்



ஒருவரது நேர்மை குறித்து சந்தேகம் வந்துவிட்டால், அவர் தனது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை போக்க, உடனடியாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். அந்த வகையில் பொண் டிங், பிரொக்கன் குறித்து வெளியான செய்தியை பொய் என இவர்கள் இருவதும் உடனடியாக நிரூபிக்க வேண்டும் என்று அவுஸ்ரேலிய சகலதுறை வீரர் வட்சன் தெரிவித்துள்ளார்.

லண்டன் நீதிமன்றில் சூதாட்டம் தொடர்பாக வெளியான செய்திகள் மிகவும் அதிர்ச்சியாகவும், ஏமாற்றமாகவும் உள்ளது. இதில், பொண்டிங், பிரொக்கன் குறித்து வெளியான சூதாட்ட செய்திகள், அவர்களது நேர்மை குறித்து சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எப்போது இந்தக் கேள்வி எழுந்து விட்டதோ, அப்போதே இவர்கள் இருவரது நடத்தை குறித்து சந்தேகம் வந்து விட்டது என்று தான் அர்த்தம். ஒருவரது நேர்மை குறித்து சந்தேகம் வந்துவிட்டால், அவர் தனது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை போக்க, உடனடியாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

ஒருவேளை எனது பெயரை தெரிவித்து இருந்தால், அதைப் போக்குவதற்கான வேலைகளைச் செய்திருப்பேன். ஏனெனில், அதிகப்படியான மக்கள் கிரிக்கெட்டை தேர்வு செய்து விளையாடுகின்றனர். இந்நிலையில், இவர்கள் விரைவில் குற்றமற்றவர் என்பதை நிரூபித்து வெளியில் வரவேண்டும். இது உங்களால் முடியும். கிரிக்கெட்டை நாம் எல்லோரும் நேசிக்கிறோம் என்று எனக்குத் தெரியும் எனவும் அவர் தெரிவித்தார.


**ஸ்ரீவோ வேண்டுகோள்:**

அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ஸரீவோ, குறிப்பிடுகையில்,

லண்டன் நீதிமன்றில் என்ன நடக்கிறது என்று சரியாகத் தெரியவில்லை. பல வழிகளில் வெளியான தகவல்கள் அடிப்படையில் கூறுகிறேன். சூதாட்ட புகாருக்கு ஆளான வீரர்களுக்கு உண்மை கண்டறியும் சோதனை நடத்த வேண்டும். இவ்வாறு செய்தால் அனைத்துப் புதிருக்கும் விடை கிடைத்துவிடும். இதில் 98 சதவீதம் உண்மை வெளியாகிவிடும். தங்களை குற்றமற்றவர் என்று நிரூபிக்க, வீரர்களுக்கு இது தான் சரியான வழி எனவும் அவர் தெரிவித்தார்.

# பந்துகள் வடிவமைப்பதில் அடிக்கடி மாற்றம் வீரர்கள் காயத்திற்கு இதுவே முதல் காரணம்

ரென்னிஸ் தொடர்களில் பந்துகளின் வடிவமைப்பு அடிக்கடி மாற்றப்படுவதால் வீரர்களுக்குக் காயங்கள் ஏற்படுகிறது என்று ஸ்பெயின் நட்சத்திர வீரர் ரபேல் நடால் தெரிவித்துள்ளார். பங்கொக்கில் ஒரு பந்து, டோக்கியோவில் வேறொரு பந்து, பின்னர் ஷாங்காயில் மற்றொரு பந்து. இது மிகவும் அதிகம். இது அபாயகரமானது இதனால் காயங்கள் ஏற்படும். இது தோள்பட்டைக்கு அபாயகரமானது. ஒவ்வொரு வாரமும் பந்துகளை மாற்றமுடியாது.



குறைந்த பணம் சம்பாதித்தால் எனக்கு போதும், பந்துகளை மாற்றி காயமடையாமல் இருந்தால் சரி. டோக்கியோவில் கொடுக்கப்பட்ட பந்து பெரிதாக உள்ளது, மந்தமாகச் சென்றது. இங்கு ஷாங்காயிலோ பந்து வேகமாகச் செல்கிறது, சிறிதாக இருக்கிறது பல வேளைகளில் மட்டையில் சிக்குவதில்லை. இது அதிகம் பறக்கிறது மிகவும் கடினமாக உள்ளது. உதாரணமாக இவ்வாறு செய்யலாம், மண்தரை ரென்னிஸ் தொடர்கள் வரும்போது ஒரேபந்தை பயன்படுத்தலாம். அதேபோல் கடின களங்களில் பயன்படுத்தப்படும் பந்தை அந்த சீசனில் பயன்படுத்தலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஆசியாவில் நடைபெறும் ரென்னிஸ் தொடர்களில் கடந்த 3 தொடர்களில் 3 வெவ்வேறு பந்துகள் பயன்படுத்தப்பட்டன, தொடர்களை அனுசரணை செய்யும் நிறுவனங்களின் வணிக நெருக்கடிகளுக்கு தொடர் அமைப்பாளர்கள் செவி சாய்க்கின்றனர் என்று பிரிட்டன் வீரர் ஆண்டி முர்ரேயும் கேள்வி எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்தின் ஆவணப்படம் பிரித்தானியாவில் காட்சிப்படுத்தல்

(கொழும்பு)

பிரித்தானியாவின் சனல்-4 அலைவரிசை ஒளிபரப்பிய கொலைக் களம் காணொளிக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் தயாரித்த ஆவணப்படம் முதற் தடவையாக பிரித்தானியாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரித்ததானிய நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்டதாக பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.குறித்த ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்டதை அடுத்து அங்கு கலந்துரையாடலொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க, பிரித்தானியாவிலுள்ள இலங்கையின் உயர்ஸ்தானிகர் கலாநிதி க்ரிஸ் நோனிஸ் ஆகியோரும் பிரித்தானிய நாடாளுமன்ற பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்களும் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

சனல்-4 அலைவரிசையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகவியலாளர்களும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

அங்கு கருத்து வெளியிட்ட பிரித்தானியாவிற்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் கலாநிதி க்ரிஸ் நோனிஸ், இலங்கையின் சமூகங்களுக்கிடையே நிலையான சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான முயற்சிக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும் வகையிலும் பக்கச்சார்பற்ற செய்திகள் வெளியிடப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.



தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கங்களின் அதிருப்தியாளர்களின் குழுவினரால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ராஜகிரியாவில் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

## உப்புவெளி அபயபுரத்தில் கைக்குண்டுகள் மீட்பு

(திருமலை)

• திருகோணமலை உப்புவெளி அபயபுரம் பகுதியில் மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உப்புவெளி அபயபுரம் உயர் மகளிர் கல்லூரியில் விளையாட்டு மைதானம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேலைத் தொழிலாளி ஒருவர் மண்ணை வெட்டி அகற்றியபோது இக் கைக்குண்டுகள் சிக்கியுள்ளன.

உடனடியாக உப்புவெளி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அவ்விடத்திற்கு வந்த இராணுவத்தினர் குண்டுகளை செயலிழக்கச் செய்தனர்.மேலதிக விசாரணைகளை உப்புவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உலக சனத்தொகை அதிகரிப்பினால் இலங்கையிலும் பிரச்சினை உருவாகும்

## ஐ.நா.சனத்தொகை நிதியம் எச்சரிக்கை

(கொழும்பு)

**உலக சனத்தொகை இம் மாதம் 31இல் 7 பில்லியன் ஆகிவிடும். சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக இலங்கையும் பல பிரச்சினைகளை எதிர்கொள்ளுமென ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் தெரிவித்துள்ளது.**

சனத்தொகை அதிகரிக்கும்போது வேலையின்மை, சுகாதாரப் பிரச்சினைகள், கல்வி வாய்ப்பு அதிகரிப்பு ஆகிய சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு இலங்கை முகம் கொடுக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் குறிப்பிட்டுள்ளது.

விரைந்து வளர்ந்து வரும் வயது முதிர்ந்தோர் சனத்தொகையைக் கொண்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுள் ஒன்றாக இலங்கையும் உள்ளது. தற்சமயம் சனத்தொகையின் 10 சதவீதத்தினர் 60 இலும் கூடிய வயதுடையவராகவுள்ளனர். 2025இல் வயது முதிர்ந்தோர் சனத்தொகையின் 20 சதவீதமாக காணப்படுவர். இதில் ஆண்களைவிட பெண்கள் அதிக தொகையில் காணப்படுவர்.

கட்டிளமைப் பருவத்தினரும் இளைஞர்களும் தற்போது மக்கள் தொகையில் 26 சதவீதமாகவுள்ளனர். இலங்கையின் சனத்தொகைக் கூறில் முன்னொருபோதும் இளைஞர் பங்கு இவ்வளவு அதிகமாக இருந்ததில்லை. இலங்கையில் 15 தொடக்கம் 24 வயதிற் கிடைப்பட்டோர் தொகை 5.6 மில்லியனாகும். இவர்களுக்கு இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் கருத்தடை பற்றி போதிய அறிவில்லையென ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் கூறியுள்ளது.

வேலையின்மை வீதம் 1990இல் 29 சதவீதமாக காணப்பட்டது. இது 2005இல் 30.5 சதவீதமாக அதிகரித்தது. கருத்தடை முறைகளைப் பயன்படுத்துவோர் தொகை 1987இல் 61.7 சதவீதமாக காணப்பட்டு 2007இல் 70.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. இருப்பினும் சில பகுதிகளில் கருத்தடைச் சாதனங்களின் பாவனை மிகக்குறைவாகவுள்ளது. மட்டக்களப்பில் இது 34.5 சதவீதமாக குறைந்தளவிலுள்ளது.

சனத்தொகை அதிகரிக்கும் போது புதிய பிரச்சினைகள் உருவாகும். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப் பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் தெரிவித்துள்ளது

# தந்தையின் அரசியலை தொடர்வதற்கு தயாராகும் பிரேமச்சந்திரவின் மகள்



(கொழும்பு)

துப்பாக்கிச் சூட்டுச் சண்டையில் கொல்லப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி யின் ஆலோசகருமான அமரர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் புதல்வியான ஹிருணிகா பிரேமச்சந்திர தனது தந்தையின் அரசியல் பணியைத் தான் முன்னெடுப்பது குறித்து ஆலோசிப்பதாக தெரிவித்துள்ளார். கொலன்னாவ மக்களை தனிமைப்படுத்தப் போவதில்லை எனவும் எதிர்வரும் நாட்களில் அரசியலில் பிரவேசிக்கும் உத்தேசம் இருப்பதாகவும் ஹிருனிகா குறிப்பிட்டுள்ளார்.

தனது தந்தை மீது மக்கள் கொண்டிருந்த பாசத்தினைத் தன்னால் மேலும் உணரக் கூடியதாக உள்ளதாகவும், அந்த மக்கள் எனது தந்தையின் அரசியல் பணியை ஏற்றிருந்தனர் எனவும் இந்த நிலையில் மக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு தந்தையின் பணியைத் தான் முன்னெடுப்பது குறித்து ஆலோசிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தனது தந்தை அரசியலில் காலடி எடுத்து வைத்த காலம் தொட்டே பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருந்தார். இருப்பினும் மக்களுக்குச் சேவை செய்வதனையே அவர் தனது நோக்கமாகக் கொண்டிருந்தார் எனவும், அரசியல் வாழ்வில் தனது தந்தை பணத்தையோ, சொத்துகளையோ சேர்க்கவில்லை. பதிலாக மக்களின் ஆதரவினையே அதிகரித்துக் கொண்டார் என்றும் ஹிருனிகா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து குறிப்பிட்டுள்ளதாவது, தந்தைக்கு பெருமளவில் மக்கள் ஆதரவு காணப்பட்டது, அனைவர் மீதும் அன்பு காட்ட வேண்டும் என்பதே தந்தையின் கொள்கையாக அமைந்திருந்தது. தந்தை அரசியல் வாழ்க்கையில் பல்வேறு அனர்த்தங்களையும், அழுத்தங்களையும் எதிர்நோக்கினார். நீண்ட காலமாக அரசியலில் ஈடுபட்ட போதிலும் தந்தை சொத்துக்களையும் பணத்தையும் சம்பாதிக்கவில்லை மாறாக மக்களை சம்பாதித்துள்ளார்.

மட்டக்களப்பு போன்ற தூர பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் தந்தையின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வருகை தந்துள்ளனர். எனினும் தாக்குதலை நடத்திய மற்றைய அரசியல்வாதி உயிருக்குப் போராடி வருகின்ற போதும் மக்கள் அவரைச் சென்று பார்வையிடவில்லை என்று பாரத்தவின் புதல்வி ஹிருனிகா கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் அரசியல் கலாசாரத்தில் சாதக மாற்றத்தை ஏற்படுத்துவேன்

(கொழும்பு)

சமூக பிரிவுகளுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் நாட்டின் அரசியல் கலாசாரத்தில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துதல் என்பவற்றிற்காக இதுவரை மேற்கொண்டு வந்த நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க உள்ளதாக மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

தம்மீது நமபிக்கை வைத்து வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக தெரிவித்த அவர், எதிர்ப்பார்க்கப்பட்ட இடத்தை அடைவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காத போதிலும் நாட்டின் அரசியல் கலாசாரத்தில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மேலும் ஒரு அடியை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



கொழும்பு நகர மக்கள் இம்முறை வழங்கிய மக்கள் ஆணை முழுமையற்றது மாநகர சபை என்ற வகையில் முன்னேற்றத்தை நோக்கி செல்லக் கூடிய கொள்கைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் தெளிவான இணக்கப்பாடு காணப்படவில்லை என்பதையே இது உணர்த்துகின்றது. நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் மக்கள் வெவ்வேறு பிரிவுகளாக பிரிந்துள்ளமை மற்றும் தாம் தேர்தல் நடவடிக்கை முழுவதும் குறிப்பிட்டதைப் போன்று சமூகப் பிரிவுகளிடையே நிலவும் நம்பிக்கையின்மை ஆகியனவும் இந்த முடிவில் பிரதிபலிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டு பணியாளர்களுக்கான காப்புறுதி கொடுப்பனவுத் திட்டம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணி புரியும் போது பல்வேறுப்பட்ட நோய்களுக்கு உள்ளாகுபவர்களுக்கான, காப்புறுதிப் கொடுப்பனவுத் திட்டம் விரைவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய, தேசிய காப்புறுதி நிதியத்தில் விஷேட பிரிவு ஒன்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் நேற்றுமுன்தினம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான நிகழ்வில் தேசிய காப்புறுதி நிதியத்தின் தலைவர் சேனக அபேகுணசேகர மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் பொதுமுகாமையாளர் ஹரிச்சந்திர பட்டகொட ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர்.


01. a) வியாபாரி ஒருவர் ஒரு பொருளை ரூபா 500 இற்கு வாங்கி அதன் விற்பனை விலையை ரூபா 650 எனக் குறித்தார்.

1) அவர் அடைந்த லாபம் எவ்வளவு?
2) இலாப சதவீதம் யாது?
3) அப்பொருளை விற்கும்போது குறித்த விலையில் 10% கழிவு கொடுத்தால் விற்பனை விலையைக் காண்க.

b)

1) $\text{Log}_3 81 = x$ என்பதை சுட்டி உருவிற்கு மாற்றுக.
2) அதிலிருந்து x ஐக் காண்க.

2) 7 cm ஆரையுடைய கால் வட்டங்கள் இரண்டையும், 21 cm விட்டமுள்ள அரை வட்டம் ஒன்றையும் உரு காட்டுகிறது.




1) கால் வட்டவில் நீளத்தைக் காண்க.
2) பெரிய அரைவட்டவில் நீளத்தைக் காண்க
3) உருவின் சுற்றளவைக் காண்க
4) உருவின் பரப்பளவைக் காண்க.

3)

1) (2y+3) (Y-8) பெருக்கிச் சுருக்குக.
2) 5x -y=9
   2x+y=5 தீர்க்குக
3) $(3a-2b)^2$ இன் விரிவைத்தருக

4) $\mathcal{E}$ = { e/ 1< e< 10 நிறை எண்}
A = {a/ 1< a < 10 முக்கோணி எண}
B = {b/1< b< 10 மூன்றின் மடங்கு எனின்

1) $\mathcal{E}$ தொடையை மூலகங்களுடன் தருக
2) A தொடையை மூலகங்களுடன் தருக
3) B தொடையை மூலகங்களுடன் தருக
4) $A \cap B$ தொடையை மூலகங்களுடன் தருக
5) $A \cap B$ தொடையை மூலகங்களுடன் தருக


5) 30 மாணவர்களின் நிறை பற்றிய விபரம் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வ.ஆ (kg) | ந.பெ x | மாண. எண் F | fx |
|---|---|---|---|
| 50 -52 | | 4 | |
| 53 -55 | | 6 | |
| 56 -58 | | 8 | |
| 59 -61 | | 7 | |
| 62 -64 | | 5 | |

1) x, fx நிரல்களைப் பூர்த்தி செய்க.
2) மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
3) ஒரு மாணவனின் இடை நிறையைக் கணிக்க.








சி. சிறிதரன்
(ஆசிரியர்)

நேரம் - 3 மணி **க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011**

# கல்வி முரசு



பா. ஜெயரூபன்
(ஆசிரியர்)

**யாழ். மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

**கணிதம் : பகுதி II**

01. கூட்டுத்தொகை யாது? 0.53 +0.09

..........................................................................

2. = 4 எனின P யின்பெறுமானம் யாது?

..........................................................................

3. பெறுமானத்தைக் காண்க $2^{(-5)}$

..........................................................................

4. ஒரு வாழைக்குலையில் 12 சீப்புகள் உள்ளன. ஒரு சீப்பிலுள்ள வாழைப்பழங்களின் எண்ணிக்கை 15 எனக்கொண்டு குலையிலுள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையைக் காண்க.

..........................................................................


5. ஒரு கூடையினுள் X எண்ணிக்கையான மாம்பழங்கள் இருந்தன. அவற்றுள் 25 மாம்பழங்கள் அழுகிவிட்டன. எனின் நல்ல மாம்பழங்களின் எண்ணிக்கையை அட்சர கணித கோவையாகக் காட்டுக.

..........................................................................

6. ஏறுவரிசையில் எழுதுக

..........................................................................

7.





ஒருங்கசையும் முக்கோணச் சோடி ஒன்று தருக? காரணம் தருக ..........................................

8. A = {ஆங்கில உயர் எழுத்துக்கள்} தொடை A யின் முதலிமை யாது?

..........................................................................

09.




உருவில் $\hat{ABE} = \hat{DBC}$ எனின்
$\hat{ABD} = \hat{EBC}$ எனக் காட்டுக.

..........................................

10. இன் பெறுமானம் யாது?

..........................................................................

11. lg 2= 0.3010 lg3 =0.4771 எனின் lg(1.5) இன் பெறுமானம் காண்க

..........................................................................

12. $\frac{x}{2} - \frac{x}{3} = 7$ தீர்க்க

13. $x^2 - 12x +$ ☐ என்பது ஓர் நிறைவர்க்கக் கோவை


1) ☐ வரவேண்டிய எண் யாது? ........................................

2) நிறை வர்க்கமாகத் தருக ........................................

14. $\sqrt{3} = 1.732$ ஐப் பயன்படுத்தி $\frac{5}{\sqrt{3}}$ இன் பெறுமானத்தைக் காண்க.

15. $\left[32^{\frac{1}{5}} + 81^{\frac{1}{4}}\right]^2$ இன் பெறுமானம் காண்க

16. சுருக்குக. $1\frac{1}{4} - \left[\frac{1}{3} + \frac{2}{5}\right]$

17. 


உருவில் $a^0$ ஐக் கணிக்க

18. $y = 3x + C$ என்னும் நேர்கோடு (-1,1) என்னும் புள்ளியினூடு செல்கிறது. எனின் C இன் பெறுமானம் காண்க.

19. $3x - 9y = 54$ எனின் (x-y) இன் பெறுமானத்தைத் தீர்க்காமல் காண்க.
$5x + Y = 18$

20. சுருக்குக $\frac{1}{x-1} - \frac{1}{x-1^2}$



21. $ab = 15$ $a^2 + b^2 = 94$ எனின் (a-b) இன் பெறுமானம் காண்க.


........................................

........................................

22. ஒழுங்கான பல்கோணி ஒன்றின் புறக்கோண மொத்தத்திற்கும் அகக்கோண மொத்தத்திற்கும் உள்ள விகிதம் 2:3 ஆகும். பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கை யாது?

........................................


........................................

23. 


உருவில் BC=14cm, AX= 4cm, AB=8 cm h ஐக் காண்க

........................................

........................................

24. 


உருவில் O வட்ட மையம்

$\hat{ADC} = 40^0$ $\hat{BOC}$ ஐக் காண்க.


........................................

........................................

25. காரணிப்படுத்துக $a^2 - 9b^2 - (a+3b)$

........................................

........................................

26. 


உருவில் 10 cm பக்கமுள்ள சதுரத் தகட்டிலிருந்து 7 cm விட்டமுள்ள நான்கு அரை வட்டத் தகடுகள் நீக்கப்பட்டு எஞ்சிய உருவை காட்டுகிறது. இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.

........................................

........................................

27. ஒரு விளக்குக் கம்பத்திலிருந்து 100 m தூரத்திலுள்ள ஒரு புள்ளியிலிருந்து கம்ப உச்சியை நோக்குகையில் உச்சியின் ஏற்றக்கோணம் 60° எனின் கம்ப உயரத்தைக் கிட்டிய m இல் தருக (Tan60=1.7321)


........................................

........................................

28. தந்தையின் வயது மகனின் வயதின் இரு மடங்காகும். இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை 111 ஆயின் ஒவ்வொருவரதும் வயது என்ன?

........................................


........................................

29. 


AB, CD என்னும் இரு தெருக்கள் O வில் ஒன்றையொன்று சந்திக்கின்றது. AB யிலிருந்தும் CD யிலிருந்தும் சமதூரத்தில் தீபன் நடக்கின்றான். சந்தி O விலிருந்து மாறா தூரத்தில் தீபா நடக்கிறாள். தீபனும் தீபாவும் சந்திக்கும் இடங்களை அமைப்பின் மூலம் காட்டுக. (ஒழுங்கு பற்றிய அறிவைக் கொண்டு)

30. $\frac{a + 2}{a - 2} = x$ என்பதில் a ஐ எழுவாயாக மாற்றுக.

கணிதம் II - தரம் 11 - 2011 - கல்விமுரசு



# பூனைகள் தீவு

ஜப்பானில் ரஸிரொஜிமா என்ற தீவு 'பூனைகளின் தீவு' என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் அந்தத் தீவில் மனிதர்களை விடப் பூனைகள்தான் அதிகம் வசிக்கின்றன. இந்தச் சிறிய தீவில் சுமார் 100 மனிதர்கள்தான வசிக்கின்றனர. ஆனால் பூனைகளின் எண்ணிக்கையோ ஆயிரத்தைத் தாண்டுகிறது. பூனைகளை வளர்த்து உணவு கொடுததால் தீவில் செழிப்பு அதிகரிக்கும் என்பதும் அங்குள்ள மக்களின் நம்பிக்கை. எனவே இத்தீவில் பூனைகளுக்கு கோவில், ஸதூபிகள், நினைவுச்சின்னங்கள், பூனை உருவில் வீடுகள், கட்டடங்கள் என ஏராளமானவை கட்டப்பட்டுள்ளன.

# சொல்லாத சேதிகள்

**செல்வியின் நினைவுக் கூட் வரும் ஞாயிறன்று (16.10.201 கனடா, ரொறன்ரோ நகரில் நடைபெறவிருக்கிறது.**

'தோழி' இதழின் ஆசிரியருப கவிஞரும், பெண்ணிலைவாதியுப எழுத்தாளருமான செல்வி என்ற அழைக்கப்பட்ட சேமமடுவைச் சேர்ந்த செல்வநிதி தியாகராசா யாழ் பல் கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் இறுதியாண்டு மாணவியாக இருந்தவேளையில் கடத்தப்பட்டு இருபது ஆண்டுகள் கடந்துவிட்டன.



ஈழத்து பெண் கவிஞர்களின் கவிக் குரலாக வெளியிடப்பட்ட சொல்லாத சேதிகள் என்ற தொகுப்பில் செல்வியின் கவிதைகள் வெளிவந்தன. செல்வியின் கவிதைகள் மனஓசை, மண், அரங்கேற்றம், ஓசை, நான்காவது பரிமாணம், சரிநிகர், திசை போன்ற இதழ்களிலும் வெளிவந்தன. சில கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு தொகுப்புக்களிலும் இடம்பெற்றன. சிறந்த பெண்ணியவாதியான செல்வி யாழ் பெண்கள் ஆய்வு வட்டம், யாழ்பல் கலைக்கழக மாணவ அவை மற்றும் இலக்கியவட்டத்தின் உறுப்பினராகவும் இருந்தவர்.

செல்வியின் விடுதலைக்காக பல சர்வதேச நாடுகள் குரல் கொடுத்தன. சர்வதேச மன்னிப்புச் சபை உள்ளிட்ட பல மனித உரிமை நிறுவனங்களும் அவரது விடுதலையைக் கோரியிருந்தன. சர்வதேச மனிதஉரிமை அமைப்பான Amnesty International தனது 1994 ஆம் ஆண்டு மார்ச் இதழில் செல்வியின் விடுதலையைக் கோரி எழுதியது.

இந்த காலகட்டத்தில்தான் உலகப் புகழ்பெற்ற 'Poetry International Award' கவிதைக் கான சர்வதேச விருது செல்விக்கு சர்வதேச கவிஞர்கள் எழுத்தாளர்கள் நாவலாசிரியர்கள் கூட்டமைப்பான Poets Essayists and Novelists அமைப்பால் வழங்கப்பட்டது.

# ஹொலிவுட் ரோபோ




அள்ளக் அள்ள குறையாத அட்சய பாத்திரம் என ஹொலிவுட்டில் வெளியாகும் குத்துச்சண்டைக் கதைகளைச் சொல்லலாம். எந்தவொரு இயக்குநரும், தன்னை தயாரிப்பாளர்களின் விருப்ப இயக்குநராக நிலை நிறுத்திக் கொள்ள இக்கதையையே பெரும்பாலும் தேர்ந்தெடுப்பார். அந்தவகையில் வெளியாக இருக்கும் 'ரியல் ஸ்டீல்' ஹொலிவுட் படமும் குத்துச்சண்டையை மையமாகக் கொண்டதுதான். என்ன, மனிதர்களுக குப் பதில் இந்தப் படத்தில் ரோபோக் கள் boxing போடுகின்றன!

சார்லி கெண்டன், புகழ்பெற்ற ஒரு குத்துச்சண்டை வீரர். ரோபோ தயாரிப பில் ஆர்வம் காட்டும் மகனின் உதவியுடன ஒரு ரோபோவை தயார் செய்கிறார். தனக்கு தெரிந்த அனைத்து boxing வித்தைகளும் அந்த ரோபோவுக்கு கற்றுத் தருகிறார். நடக்கவிருக்கும் போட்டியில் அந்த ரோபோ வெற்றி பெற்றால் அவரது வாழ்க்கைக் கஷ்டம் தீரும்.

ஆனால், போட்டி நாளில் எதிர்பாராத சிக்கல்கள் எழுகின்றன. சார்லி கெண்டன் தயாரித்த ரோபோ, எதிரணி ரோபோவிடம் அடிமேல் அடி வாங்குகிறது. ஒரு கட்டத்தில் தோல்வி நிச்சயம் என அனைவருமே உணருகிறார்கள். இனி எதிர்காலம் சூன்யம்தான் என்ற முடிவுக்கு சார்லி கெண்டன் வருகிறார்.

இதற்குப் பிறகு முடிவு என்ன என்பது இந்தக் கதையை கேட்டுக் கொண்டிருக்கும் கருவிலுள்ள சிசுவுக்கும் தெரியும். இந்த 'ரொக்கி' பாணிக் கதையைத்தான் ரோபோவை இணைத்து 127 நிமிடங்கள் ஓடக்கூடிய திரைப்படமாக எடுத்திருக்கிறார்கள்.

1956 இல் ரிச்சர்ட் மேக்திசன் என்பவரால் எழுதப்பட்ட 'ஸ்டீல்'சிறுகதையின் திரை வடிவமே இப்படம். இயக்கியிருப்பவர், ஷான் லேவி. 'நைட் அட் மியூசியம்' என்ற சூப்பர் ஹிட் படத்தின் இயககுனர். ஹீரோவாக நடித்திருப்பவர், ஹக் ஜக்மன். 'எக்ஸ்-மென்' தொடரில் வோல்விரின் ஆக நடித்திருப்பாரே... அவரேதான்.

பராமவுண்ட் பிக்சர்ஸ் பல வருடங்களாக இப்படத்தை எடுக்க வேண்டும் என்று முயற்சித்து வந்தது. ஆனால், ட்ரீம் 'வுஸ் நிறுவனத்தினர் பிரிந்தபோது, பராமவுண்ட் பிக்சர்ஸிடமிருந்து 17 திரைக் கதைகளையும் தங்களுக்கான பங்காக எடுத்துக் கொண்டார்கள். அதில் ஒன்று 'ரியல் ஸ்டீல்' படத்தின் திரைக்கதை.

ஒரு சுபயோக சுபதினத்தில் இப்படத்தின் திரைக்கதையை ஒருவர் வாசித்தார். அவருடைய நாடி நரம்புகள் துடிக்க ஆரம்பித்தன. தந்தைக்கும் மகனுக்குமான பாசம் இழையோடும் இக்கதையில், ரோபோவும் இருப்பதால் பணப்பெட்டி நிரம்பும் என அவர் அக்கணமே உணர்ந்தார. உடனடியாக படப்பிடிப்பு தொடங்கும்படி உத்தவிட்டார்.

அவர், ட்ரீம் ஹவுஸ் நிறுவனத்தின் பங்குதாரர்களில் ஒருவரான ஸ்பீல்பெர்க்!

**- கே. என். சிவராமன்**

# விதைக்கப்பட்டவைகள் மீட்டெடுக்கப்படுகின்றன

இந்த விதைப்பும் ஆபத்தானது. மீட்டெடுப்பும் ஆபத்தானது. போரின்போது விடுதலைப் புலிகளினாலும் படையினராலும் ஏட்டிக்குப் போட்டியாக விதைக்கப்பட்ட கண்ணி வெடிகளும் மிதிவெடிகளும் இன்று மக்களின் வாழ்க்கைக்கு மிகப் பெரிய சவாலாக மாறியுள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு மிகவும் நெருக்கடியைக் கொடுக்கும் அளவில் இந்தச் சவால்கள் இருக்கின்றன.

இந்தச் சவால்களை இன்று முன்னெடுப்போர் வன்னியிலுள்ள வறிய நிலையிலுள்ளோரே. மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுவோர் பெரும்பாலும் வறிய நிலையில் இருப்போரே.

நாளொன்றுக்கு 850 ரூபாய் சம்பளத்துக்கு இந்தப் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். அதுவும் தினக்கூலிகளாக. ஆனால், இந்த வேலை கிடைத் திருப்பதே தமக்குப் பெரிய உதவியும் ஆறுதலும் என்கின்றனர் இந்தப் பணியாளர்கள். போருக்குப் பிந்திய வாழ்க்கை மிகவும் சிரமமாகவே இருக்கிறது பலருக்கும். அந்தச் சிரமங்களைத் தவிர்ப்பதற்கு இந்த மாதிரியான பணிகள் உதவுகின்றன. ஆபத்தான பணிகளாக இருந்தாலும் வயிற்றுப் பசியைப் போக்குவதற்கு உதவுகிறதே என்று இந்தப் பணிக்குப் போகிறார்கள்.

அதிலும் கணவனை இழந்த ஆதரவற்ற பெண்களிற் பலருக்கு இந்தப் பணி ஒரு பேருதவியாகவே இருக்கிறது. வெடிபொருட்களை அபாயப் பிராந்தியத்தில் அகற்றும் ஒரு பணிக்கு தமிழ்ப் பெண்கள் பழக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது சாதாரணமானதல்ல. மீள்குடியேற்றத்தைச் சாத்தியப்படுத்துவதற்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நிலப் பகுதியை மீண்டும் மக்கள் வாழக்கூடிய 'அவர்கள் தொழிற் செய்யக்கூடிய' புழங்கக் கூடிய பகுதியாக மாற்றுவதற்கும் பங்களிக்கும் இந்தப் பணியாளர்கள் நிச்சயமாகப் போற்றப்பட வேண்டியவர்கள்.

அபாயப் பிராந்தியமொன்றை, அபாயமற்ற பிராந்தியமாக மாற்றி, அதை உத்தரவாதப்படுத்துவதென்பது எவ்வளவு மகத்தான பணியாகும். உண்மையில் இது ஒரு ஒப்பற்ற சேவையே. பட்ட மரங்களாக மாறிய ஒரு சூழலை பசுமையான சூழலாக மாற்றும் ஒரு சூழலியற் பணி இவர்களுடையது. வெறும் அறிக்கைகளிலும், கருத்தரங்குகள், வாய்ப்பேச்சுகள், அமைப்புகள், அடையாளப்படுத்தல்கள் என்று தங்களைச் சூழலியலாளர்களாக முதன்மைப்படுத்தி, ஒளிவட்டங்களைச் சூடிக் கொள்ளுவோரிடையே, இவர்கள் தங்களின் உயிரையும் உழைப்பையும் கொடுத்து அதைச் சாத்தியப்படுத்துகிறார்கள்.

ஆகவே, போருக்குப் பிந்திய இந்தச் சிறந்த, முக்கியமான பணியை, பங்களிப்பை வழங்குவதில் கண்ணி வெடிகளை அகற்றும் பணியாளர்களே முதலிடம் பெறுகின்றனர். கண்ணிவெடி அகற்றப்படாத எந்தப் பகுதியிலும் யாரும் மீள்குடியேற்றம் செய்ய முடியாது என்பது இந்தப் பணியின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கிறது. ஆகவே, இந்தப் பணியாளரைக் குறித்த கவனம் என்பது சமூக மட்டத்தில் ஏற்பட வேண்டும். அது உயர்வுற வேண்டும். ஆனால், அது அப்படி நடக்கவில்லை.

இவர்கள் தொண்டு நிறு வனமொன்றில் வேலைசெய் கிறார்கள் என்ற மனப்பதிவே பலரிடமும் காணப்படுகிறது. அதுவும் அடிமட்டப் பணியாளர்களாகவே செயற்படுகிறார்கள் என்று. ஆனால் இவர்கள், காட்டிலும் மேட்டிலும் மண்ணைக் கிண்டி, கிளறி கண்ணிவெடிகளைத் தேடுகிறார்கள். களைத்துப் போன முகங்களோடும், வெய்யிற் காய்ந்த களைப்போடும் அழுக்கடைந்த உடைகளோடும் தினமும் வேலை முடிந்தபின் வீடுகளுக்குத் திரும்புகிறார்கள். இவர்களின் வீடுகளோ குடிசைகளாகவும் இருளடைந்த வீடுகளாகவும் இருக்கின்றன.



போருக்குப் பிந்திய நிலைவரங்களை உருவாக்குவதில் இவர்கள் முக்கிய பங்காற்றியிருக்கின்றனர் என்பதை யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இன்னும் பல கிராமங்களும் பல பிரதேசங்களும் இவர்களுடைய பணிக்காகவும் 'சுத்தமாக்கப்பட்டவை' என்ற இவர்களின் உறுதிப்படுத்தலுக்காகவும் காத்திருக்கின்றன.

வீதியால் இந்த, கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் செல்லும்போது பெரும்பாலும் அநேகரும் அவர்களைப் பொருட்படுத்துவதில்லை. ஆனால், அதைப் பற்றிய கவலைகளை எல்லாம் விட்டு விட்டு இவர்கள் தங்களின் பாட்டில் தங்களின் காரியங்களைப் பார்த்துக்கொள்கிறார்கள். அப்படித் தங்களின் பணியைச் செய்யும் இவர்களை வன்னியின் தெருக்களில் தினமும் நீங்கள் பார்க்கலாம்.

கனத்த உடை, களைப்படைந்த முகம், அழுக்கடைந்த தேகம், பழைய சைக்கிள்கள்.... மதியத்துக்குப் பின்னர் இதே கோலத்தில் இவர்கள் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதியை இவர்கள் மீட்டுக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரதேசத்தை விடுவித்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு பொழுதிலும் இயல்பு வாழ்க்கையை நோக்கிச் சமூகத்தை நகர்த்துவதற்கு உழைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு நாளும் மக்களின் மீள் குடியேற்றத்துக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இதை யாரறிவார்? யார் புரிந்து கொளவார்? இவர்களை விட, இவர்களுடைய பணிகளை விட அரசியல்வாதிகளின் அறிக்கைகளே எல்லோருக்கும் தெரிந்தனவாக இருக்கின்றன.

**கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன் கட்டுரையிலிருந்து.....**

# மத்தியில் அடுத்த ஆட்சியை பா.ஜ.க நிச்சயம் கைப்பற்றும்

## அத்வானி சூளுரை




(பாட்னா)

பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மத்தியில் அடுத்து ஆட்சியைப் பிடிக்கும் என்று பா.ஜ.க மூத்த தலைவர் அத்வானி தெரிவித்தார். ஊழலுக்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில் ரத யாத்திரை மேற்கொள்ளும் அவர்,2ஆவது நாளான நேற்று முன்தினம் புதன்கிழமை பாட்னா சென்றடைந்தார். அங்கு செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சியில் இலஞ்ச, ஊழல் விவகாரங்கள் மலிந்து விட்டன. ஊழல் வழக்குகளில் சிக்கி பல்வேறு அமைச்சர்கள் திகார் சிறையில் உள்ளனர். டில்லி திகார் சிறை இப்போது வி.ஐ.பி.க்களின் சிறையாக மாறி விட்டது.

இந்தியாவில் 1948 முதல் 2008 வரை முறைகேடான நிதிப் பரிமாற்றத்தில் அரசுக்கு 10,65,000 ரூபா கோடி இழப்பு ஏற்பட்டிருப்பதாக சர்வதேச நிதி ஒருங்கிணைப்பு அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போதைய நிலவரப்படி இந்தியாவின் முறைகேடான நிதிப் பரிமாற்றம் தோராயமாக 23,10,000 ரூபா கோடியாக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனால், கறுப்புப் பணத்தை மீட்க மத்திய அரசு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. மக்களவைக்கு முன்கூட்டியே தேர்தல் ஊழல் விவகாரங்களால் தேர்தல் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது, தேசிய ஜனநாயகக் கூட்டணி அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என்றார்.

## இந்தியச் செய்திகள்



இந்தியாவில் சிறிகோத்தா ஏவுதளத்திலிருந்து நேற்று முன்தினம் ஏவப்பட்ட பி.எஸ்.எல்.வி.சி - 18 ரொக்கட் விண்ணில் பாய்கிறது.

# இங்கிலாந்து உயர்நீதிமன்றில் முதல்முறையாக சீக்கிய நீதிபதி

(புதுடில்லி)

இங்கிலாந்தைச் சேர்ந்த சீக்கியர் ராபிந்தர் சிங் அந்த நாட்டின் உயர்நீதிமன்ற நீதிபதியாக பொறுப்பு ஏற்றுள்ளார்.இங்கிலாந்து வரலாற்றிலேயே வெள்ளையர் அல்லாத ஒருவர் உயர்நீதிமன்றம் நீதிபதியாக பதவி வகிப்பது இதுவே முதல் முறையாகும். இவர், பிரிஸ்டல் கிரம்மர் பள்ளியில் படித்தார். மேற்படிப்பை கேம்பிரிட்டிஷ் பல்கலைக்கழகத்தில் பயின்றார்.

மாட்ரிக்ஸ் அறக்கட்டளை நிறுவனர்களில் ராபிந்தர் சிங்கும் ஒருவர். இந்த அறக்கட்டளையின் இணை நிறுவனராக இங்கிலாந்து முன்னாள் பிரதமர் டோனி பிளேரின் மனைவி செர்ரி பிளேர் இருக்கிறார்.

# மாற்றுத் திறனாளிகளுடன் பிறந்தநாள் கொண்டாடிய சினேகா




(சென்னை)

நடிகை சினேகா,தனது பிறந்தநாளை நேற்றுமுன்தினம் பார்வையற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுடன் கேக் வெட்டி கொண்டாடினார். முன்னணி நடிகைகளில் ஒருவரான சினேகா, ஒவ்வொரு ஆண்டும் தனது பிறந்தநாளை அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் போன்ற இடங்களில் கொண்டாடி வருகிறார்.

அதேபோல இந்த ஆண்டு தனது பிறந்தநாளை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோயிலில் தனது பெற்றோருடன் சென்று வழிபட்டார். பின்னர் பார்வையற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் காப்பகத்துக்குச் சென்று அவர்களுடன் கேக் வெட்டி பிறந்தநாளைக் கொண்டாடினார்.

அடுத்ததாக, அவர்களுடைய விருப்பத்திற்கிணங்க ஆட்டோகிராப் படத்திலிருந்து ஒவ்வொரு பூக்களுமே பாடலையும் பாடி அவர்களை மகிழ்வித்தார். பின்னர் அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மதிய உணவை தன் கையால் பரிமாறினார்.

# மூவரின் தூக்குத்தண்டனையை எதிர்த்து மத்திய அரசுக்கு 8000 மனுக்கள்



முருகன் சாந்தன் பேரறிவாளன்

(புதுடில்லி)

முருகன், சாந்தன், பேரறிவாளன் சார்பில் 8000 கருணை மனுக்கள் இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவரின் சார்பிலும் 8000ற்கும் அதிகமான கருணை மனுக்கள் இந்திய மத்திய அரசுக்கும், இந்திய குடியரசுத் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

ராஜிவ்காந்தி கொலைவழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்டனையை நிறுத்துமாறு கோரியே 8000 ற்கும் அதிகமான கருணை மனுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் உள்ள 801 அரசியல் கைதிகளின் சார்பிலும், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள மனித உரிமை அமைப்புகள், தமிழர் அமைப்புகள், அனைத்துலக மன்னிப்புச்சபை உறுப்பினர்கள் சார்பில் ஏராளமான கருணை மனுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.அத்துடன், நன்கு அறியப்பட்ட பிரமுகர்களான முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ஆர்.கிருஸ்ணய்யர்,சமூக சேவையாளர் பாபா அம்தே, மும்பை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஹொஸ்பெற் சுரேஸ், உச்சநீதிமன்ற சட்டவாளர் இந்திரா ஜெய்சிங், அகாலி தள் தலைவர் சிம்ரஞ்ஜித் சிங் மான், கட்டுரைக் கலைஞர் லோறி பாக்கர், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பூஹதீன், கேலிச்சித்திர வரைஞர் அபு ஆபிரகாம் உள்ளிட்ட பலரும் இந்தக் கருணை மனுக்களை அனுப்பியுள்ளனர்.

தகவல் உரிமைச்சட்டத்தின் கீழ் சட்டவாளர் மயில்சாமி உள்த்துறை அமைச்சிடம் விளக்கம் கோரியதன் அடிப்படையிலே இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

# கூடங்குளம் அணுமின் திட்டத்திற்கு முதல்வரிடம் உதவிகோரும் பிரதமர்



(புதுடில்லி)

கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக முதல்வர் ஜெயலலிதாவுக்கு பிரதமர் மன்மோகன் சிங் மீண்டும் கடிதம் எழுதியுள்ளார்.

கூடங்குளம் அணுமின் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று அப்பகுதி மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில், அத்திட்டத்தை செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கியும், அதற்கு ஒத்துழைப்புக் கோரியும் மன்மோகன் சிங் கடிதம் அனுப்பியுள்ளார்.

கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக ஜெயலலிதாவுக்கு அவர் எழுதியுள்ள இரண்டாவது கடிதம் இது என்பது குறிப்பிடத்தக்கது அக்கடிதத்தில்

கூடங்குளம் அணுமின் நிலையப் பணிகள் கைவிடப்பட்டால், தமிழகத்தின் தொழில் வளம் பாதிக்கப்படும். ஏனெனில் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் இருந்து 2 ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இது கிடைக்காவிட்டால் பெரும் பாதிப்பு ஏற்படும்.

எந்த விடயத்துக்காகவும் பொதுமக்களின் பாதுகாப்பை மத்திய அரசு விட்டுக்கொடுக்காது. கூடங்குளத்தில் உள்ள இரு பிரிவுகள் மூலம் 2000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இதில் 925 மெகாவாட் மின்சாரம் தமிழகத்துக்கு வழங்கப்படும். இது கிடைக்கப் பெறாவிட்டால், எதிர்காலத்தில் தமிழகத்தின் வளர்ச்சியே பெருமளவில் பாதிக்கப்படும்.

தொழில் திட்டங்களும் முடங்கும். இத்திட்டத்தால் ஆபத்து ஏற்படாது என்பதை மக்களுக்கு விளக்க வேண்டுமென அணு சக்தித்துறைக்கு தனிப்பட்ட முறையில் உத்தரவிட்டுள்ளேன். இதற்கு மாநில அரசின் ஆதரவு தேவை.கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டுமென்று பிரதமர் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

# கன்னடத்தில் அம்மாவாக நடிக்கவிருக்கும் சிம்ரன்



(சென்னை)

சினிமாவில் இப்போதைக்கு நடிக்கும் எண்ணம் இல்லை சின்னத்திரையில் மட்டும் கவனம் செலுத்த திட்டமிட்டிருக்கிறேன் என்று கூறிவந்த சிம்ரன், அம்மா வேடம் என்றால் அலறியடித்து ஓடி விடுவார்.

அம்மாவேடத்தில் நடிக்கும் அளவுக்கு எனக்கு ஒன்றும் பெரிதாக வயதாகவில்லையே என்று பேசும் சிம்ரன், கன்னட திரையுலகில் சிறந்த நடிகராகத் திகழும் உபேந்திராவுக்கே அம்மாவாக நடிக்கிறாராம். உபேந்திராவே ஐம்பதை கடந்தவர்.தமிழில் படங்களே இல்லாமலிருக்கும் சிம்ரன், சின்னத்திரையில் மட்டும் ஒரு நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்.

உலகச் செய்திகள்

# தென்சீனக் கடற்பிராந்தியம்; சீனா-வியட்நாம் உடன்பாடு

சர்ச்சைக்குரிய தென் சீன கடற்பிராந்தியம் தொடர்பாக சீனா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.சிலசந்தர்ப்பங்களின் கைமீறிச் செல்லும் குறித்த கடற்பிராந்தியம் குறித்த சர்ச்சையை கையாள்வதற்காக இரண்டு நாடுகளும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.தென் சீன கடற்பிராந்தியம் குறித்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் சர்ச்சை ஏற்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையில், இந்த உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாரியளவில் எண்ணை மற்றும் வாயு வளங்கள் காணப்படுவதாக கூறப்படும், தென் சீனக் கடற்பிராந்தியம் முக்கிய கப்பல் போக்குவரத்துப் பாதையாகவும் திகழ்கின்றது.கடல் எல்லை தொடர்பான இறுதி உடன்படிக்கை, சர்வதேச சட்டத்தின் பிரகாரமே ஏற்படுத்தப்பட வேண்டு மென குறித்த உடன்படிக் கையில் குறிப்பிடப்பட்டுள் ளது.தென் சீன கடற்பிராந்தியம் குறித்து விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகள் உட்பட விடயங்கள், ஒத்துழைப்புக்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.




எழுத்து மூலமாக இவை கூறப்பட்டுள்ள போதிலும், செயற்பாட்டு ரீதியாக நடைமுறைப் படுத்துவதிலும் இரண்டு தரப்பும் சிரமத்தை எதிர்நோக்கலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தென் சீன கடற்பரப்பின் உரிமை தொடர்பாக இந்த ஆண்டு, இரண்டு தரப்பும் அடிக்கடி வாக்குவாதங்களில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இரண்டு நாடுகளினதும் கப்பல்கள் கடந்த மாதம் குறித்த கடற்பகுதியில்மோதுண்டதை அடுத்து வியட்நாம் தலைநகர் ஹனோயில் சீனாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன


# வர்த்தகத்துறையில் போர் உருவாகும் அமெரிக்காவை எச்சரிக்கிறது சீனா

(பீஜிங்)

சீன நாணயத்தின் மதிப்பை வலுக்கட்டாயமாக உயர்த்த வழிசெய்யும் மசோதா நேற்று முன்தினம் அமெரிக்க செனட் சபையில் நிறைவேறியது.பிரதிநிதிகள் சபையில் மசோதாவை நிறைவேற்றவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ள சீனா, இம்மசோதாவால் இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகப் போர் உருவாகும் என எச்சரித்துள்ளது.

சீனா தனது யுவான் நாணயத்தை டொலருக்கு எதிரான மதிப்பில் தொடர்ந்து குறைத்தே வைத்துள்ளது. இதனால் சீன ஏற்றுமதியாளர்களுக்கு அளவற்ற லாபம் கிடைப்பதாகவும், அமெரிக்காவில் ஏற்கனவே நிலவி வரும் வேலையில்லா திண்டாட்டத்தை மேலும் அதி கரிக்கும் முயற்சி இது எனவும் அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது

ஆனால் அமெரிக்க வேலையில்லா திண்டாட்டத்திற்கு தனது நாணய மதிப்பு காரணமல்ல எனவும், 2005 முதல் இதுவரை யுவானின் மதிப்பை 30 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் சீனா மறுப்புத் தெரிவித்து வருகிறது. இந்நிலையில் டொலருக்கு எதிராக வெளிநாட்டு நாணயங்களின் மதிப்பைக் குறைப்பதற்காக தங்களின் ஏற்றுமதிப் பொருட்களுக்கு மானியம் வழங்கும் நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்கள் மீது அமெரிக்கா வரி விதிக்க வழி செய்யும் மசோதா நேற்று முன்தினம் செனட் சபையில் நிறைவேறியது. ஆனால் இம்மசோதா எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியினரின் பிடியில் உள்ள பிரதிநிதிகள் சபையில் நிறைவேறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.



# காபன் உற்பத்தி வரியை அதிகரிக்கிறது அவுஸ்ரேலியா

அவுஸ்ரேலியாவில் காபன் உற்பத்திக்கான வரியை அதிகரிப்பதற்கான சட்டமூலம் அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய அரசாங்கம் கூறுகின்றது எனினும் இதன் காரணமாக பொருட்களின் விலைகள் அதிகரித்து, வாழ்க்கைச்செலவு அதிகரிக்கும் என எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

அத்துடன் தொழில்வாய்ப்புக்கள் அற்றுப்போகும் எனவும் எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.அவுஸ்ரேலியாவுக்கு அதிக வருமானம் பெற்றுக்கொடுக்கும் துறைகளில் நிலக்கரி உற்பத்தியும் ஒன்று என தெரிவிக்கப்படுகின்றது.

# மியான்மரில் கைதிகள் விடுதலை



மியான்மர் அரசு அறிவித்தபடி பொது மன்னிப்பு வழங்கப்பட்ட கைதிகளை நேற்று முன்தினம் முதல் விடுவிக்க ஆரம்பித்துள்ளது இந்த விடுதலை அரசியல் கைதிகளுக்கும் வழங்கப்படுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை. மியான்மரில் இராணுவ ஆட்சி அமுலில் இருந்த போது அரசை எதிர்த்த அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மியான்மர் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் விலக்கப்பட வேண்டுமானால் அரசியல் கைதிகள் விடுதலை உள்ளிட்ட விஷயங்களில் அந்நாட்டு அரசு கவனம் செலுத்த வேண்டும் என அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் தெரிவித்திருந்தன.

இந்நிலையில் மியான்மர் அரசு 6,300 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாகவும், விரைவில் அவர்கள் விடுவிக்கப்படுவர் எனவும் தெரிவித்தது. இந்த விடுவிப்பு நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளது. நாட்டின் பிரபல நகைச்சுவை நடிகரும், பர்மிய இயக்குனருமான ஜர்கனார் முதலில் விடுவிக்கப்பட்ட குழுவில் வெளியே வந்தார்.

2008ல் மியான்மரைத் தாக்கிய சூறாவளியை அடுத்து, அரசின் நிவாரணப் பணிகள் குறித்து அவர் விமர்சனம் செய்ததால் 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

விடுதலையான அவர் இதுகுறித்துக் கூறுகையில், "நான் மீண்டும் அதுபோல விமர்சனம் செய்தால் உள்ளே போக வேண்டியது தான். நான் இப்போது மகிழ்ச்சியாக இல்லை. என்னைப் போல சிறையில் உள்ள அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்" என்றார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

விக்ரமாதித்யன் கவிதைகளின் சிறப்பியல்புகளாக சிலவற்றை பின்வருமாறு தொகுக்கலாம் என்று கருதுகிறேன். முற்றிலும் நிகழ்காலத் தமிழ் வாழ்க்கையின் நடுத்தட்டு மனநிலையைச் சார்ந்தது விக்ரமாதித்யனின் உணர்ச்சி மண்டலம். மதிப்பீடுகளை எதிர்க்கும். அதே சமயம் அவற்றைக் கைவிட முடியாமல் தடுமாறும். புதுமையை தழுவிக்கொள்ளும். அதைச் சந்தேகத்துடன் விசாரித்துக்கொண்டிருக்கும். உறவுகளின் வெறுமையைக் குறித்துத் தெளிவுகொண்டிருக்கும். வெறுமையை இட்டு நிரப்ப அர்த்தங்கள் தேடிக் கொண்டிருக்கும். இந்த பின்னப்பட்ட மனசை முழுமையாகக் கவிதையில் சித்தரித்திருப்பவர் விக்ரமாதித்யன்.

நவீன கவிதையில் இடக்கரடக்கலுக்கு அவசியமற்ற வெளிப்படையான போக்குக்கு கலாப்ரியாவும் விக்ரமாதித்யனும் முன்னுதாரணங்கள் என்று எண்ணுகிறேன். மன விகாரங்கள், காமம் ஆகியவற்றை மேற்பூச்சுகளில்லாமல் சொல்லலாம் என்று தைரியமளித்தவர்கள் இவ்விருவரும். போதையின் உற்சவத்தையும் வீழ்ச்சியையும் விக்ரமாதித்யன் கூடுதல் இணைப்பாக்கினார். இரந்து கெடும் தனது சுயம் பற்றி எழுதுவதிலும் அவருக்குத் தயக்கம் இருப்பதில்லை.

இவற்றின் சில அடிப்படைகள் மீதான மாற்று அபிப்பிராயங்களும் எனக்கு உண்டு. கவிதையின் பாடுபொருட்களில் அவரது தேர்வு பெரும்பாலும் ஏமாற்றம் அளிப்பவை. அதிகமான எண்ணிக்கை கொண்டது அவரது கவிதையுலகம் என்பதால் இந்த பெரும்பான்மை குவியலில் கிடக்கும் கூழாங்கல்போல சாதாரணமாகத் தென்படுகிறது. ஆனால் நெருக்கமான பார்வையில் அதே கூழாங்கல் மற்றவற்றைக் காட்சியிலிருந்து மறைத்துவிடுகிறது. எப்போதும் கவிஞன் என்ற அகங்காரத்துடனேயே அவரது பார்வை. அது அவருக்கு உள்ளேயிருக்கும் பாமர வியப்புகளையோ குழந்தைமைப் பரவசத்தையோ ஞானியின் அமைதியையோ முட்டாளின் மகிழ்ச்சியையோ வெளிப்படுத்தத் தடையாகவே இருப்பதாகப் படுகிறது.

மொழிசார்ந்தும் உணர்வு சார்ந்தும் நவீனமானவர். எனினும் அவரது கவிதையாக்க முறையில் மரபான மதிப்பீடுகளுக்கு அழுத்தமான இடமுண்டு என்று தோன்றுகிறது. உறவுகள், குடும்பம், சமூகம், மதம், கலாசாரம் ஆகியவை பற்றி பழைய மதிப்பீடுகளின் மறுபரிசீலனையற்ற தொடர்ச்சியைக் கவிதைகளில் காணக்கூடும். ஆண்டாளையோ காரைக்கால் அம்மையாரையோ திருநாவுக்கரசு சுவாமிகளையோ எடுத்தாளும்போது அவர்களது மொழியின் வீச்சினாலோ கவிதைச் செறிவினாலோ ஈர்க்கப்படுவதைக் காட்டிலும் அவர்கள் மீதான பக்திக்கே ஆட்படுகிறார். இலக்கிய அரசியல் பற்றி அவர் எழுதியுள்ள கவிதைகளிலும் பழைய மதிப்பீடுகளின் எச்சம்.

பெண்கள் குறித்த விக்ரமாதித்யன் கவிதைகளிலும் மரபான அகங்காரமே தென்படுகிறது. தேவி ஸ்துதி – கணிகையர் ஒழுக்கம் என்ற இரண்டு எல்லைகளுக்குள் ஒடுங்கிவிடுகின்றன மோகமும் காமமும். பெண்ணுறுப்புகள் ஆணின் வேட்கையை நிறைவு செய்யும் உபகரணங்களாகவே சித்தரிப்புப் பெறுகின்றன. காமத்தின் புனிதப் பெருவெளியில் இரு உயிர்கள் கலந்து பரஸ்பரம் இனம் காணும் ஒரு கவிதைக்கணம் கூட இல்லாத உலகம்.

விக்ரமாதித்யனின் கவிதையுலகில் நான் வேறுபடும் திசைகள் இவை. எனினும் சக கவிஞனாக விக்ரமாதித்யன் எனக்குத் தவிர்க்கப்படக் கூடாதவர். எனக்குள் எங்கோ அவரது கவிதையின் சாரமான கூறு உயிர்த் தன்மையோடு இயங்கக் கூடும். இல்லையெனில் ஒரே மொழியில் பொதுத்தளத்தில் எப்படிச் செயல்பட முடியும்? இல்லையெனில் அவரெப்படி "போய்ச் சேர்ந்தான் புதுமைப்பித்தன் வந்து நிற்கிறான் விக்ரமாதித்யன்' என்று உரிமை பாராட்டிக்கொள்ள முடியும்? – **சுகுமாரன்**

அறுபதுகளில் புதுக்கவிதை முயற்சிகளில் ஈடுபட்டவர்களுக்கு இரண்டு விதமான பிரச்சினைகள் எதிர்ப்பட்டன ஒன்று மலிந்து மக்கி சாரமற்றுப் போன மரபுக் கவிதைகளின் அலங்காரங்கள் – இறுக்கமற்று தழுதழுக்கும் அதீத உணர்ச்சிப் பெருக்கு – இவைகளில் இருந்து கவிதையை மீட்பது. இரண்டாவது, மேற்கில் அறிவியல் சார்ந்த விஞ்ஞான அணுகுமுறைகளைப் பயன்படுத்தி புதிய வடிவங்களையும் புதிய சப்தத்தையும் உருவாக்கிக் கொண்ட புதுக் கவிதைகளில் சாதனைகளை தேர்ந்தறிந்து தமிழ்க் கவிதைகளுக்கு ஒரு ஆரோக்கியமான பாதிப்பை ஏற்படுத்துவது.

கவிஞர் சி.மணி ஆங்கில இலக்கியம் பயின்றவர். தமிழ்க்கவிதை மரபை நன்கு கற்றறிந்து ஆழமான பாண்டித்யம் உடையவர். படைப்பாற்றலும் வாழ்க்கைத் தத்துவங்கள் பற்றிய நுண்மையான சிந்தனைகளும் கொண்டவர்..

இந்த அறிவியல் தேர்ச்சியின் பலத்தில் அவர் சோதனை முயற்சிகளாக படைத்த 'நரகம்', 'பச்சையம்', 'வரும்போகும்' போன்ற நீண்ட கவிதைகள் ஆங்கில கவிதைகளின் குரலையும் தமிழ் மரபின் அடையாளங்களையும் பிரக்ஞையுடன் உபயோகப்படுத்தி ஒரு புதிய வடிவத்தை தமிழுக்கு தந்த முயற்சிகள். நவீனமாகி வரும் வாழ்க்கைச் சூழல்கள், கலாசார மாற்றங்களை சரிவர புரிந்து கொள்ள முடியாமல், தள்ளவும் முடியாமல் அள்ளவும் முடியாமல் அவதிப்படும் பாமர மனிதனின் பாலுணர்வு சார்ந்த உளவியல் பிரச்சினைகள், வாழ்க்கையை நுனிப்புல் மேயும் தமிழ் சமுதாயப் பான்மைகள் இவைகள்தான் கவிஞர் மணியின் கவிதைகளுக்கு ஆதாரமான கருப்பொருள் என்பது என் கிரகிப்பு. – **எஸ். வைத்தீஸ்வரன்**

# "நான் ஒருபோதும் எதிரியிடம் சரணடையாதவன்"

# நூலை வெளியிட்டு வைத்தார் பாதுகாப்புச் செயலர்



(கொழும்பு)

தீவிரவாதத்தை தோற்கடித்த தமது படையினரின் வெற்றியை மழுங்கடிக்க பல்வேறு நிகழ்ச்சி நிரல்களின் கீழ் இயங்கும் குழுக்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை தோற்கடிக்க வேண்டிய நிலையில் சிறிலங்கா அரசாங்கம் இருப்பதாகச் சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் சிறப்புப் படைப்பிரிவின் 25 ஆண்டுகால வரலாற்றை எடுத்துக் கூறும் கிசி வெடகத் சதுரட்ட யட்ட நொவன மா ( நான் ஒரு போதும் எதிரியிடம் சரணடையாதவன்) என்ற சிங்கள மொழியில் எழுதப்பட்ட நூலை நேற்று முன்தினம் வெளியிட்டு வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சில குறிப்பிட்ட குழுக்களும், நபர்களும் நாட்டையும், மக்களையும், போர் வீரர்களையும், அவர்களின் வெற்றிகளையும், அரசாங்கத்தையும், சிறிலங்கா அதிபரையும் காட்டிக் கொடுக்க முனைகின்றன.குறுகிய கால நன்மைகளுக்காக அவர்கள் இலங்கைப் படையினர் மீது அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்றனர்.

இலங்கைப் படையினர் போரின் போது பொதுமக்களைப் படுகொலை செய்ததாக இவர்கள் கூறும் குற்றச்சாட்டை, தகுந்த சாட்சியங்கள், புள்ளிவிபரங்களின் மூலம் அடிப்படையற்றது என்று நிரூபித்துள்ளோம்.ஆனாலும் தீயசக்திகள் தொடர்ந்தும் திரும்பத் திரும்ப அதே குற்றச்சாட்டுகளைக் கூறி வருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுகளால் நீண்டகாலத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாது.

வெளிநாடுகளில் உள்ள இராணுவ அதிகாரிகளை விடவும் சிறிலங்கா இராணுவத்தில் உள்ள அதிகாரிகள் ஆற்றல் மிக்கவர்களாக இருக்கின்றனர்.மேஜர் ஜெனரலாக தரமுயர்த்தப்படும் இராணுவ அதிகாரி ஒருவர் 10 வெளிநாட்டுப் பயிற்சிகளைப் பெற்றவர்களுக்கு சமமான நிலையில் இருக்கின்றார்.

இலங்கைப் படையினர் போரில் நிபுணத்துவம் மிக்கவர்கள். அந்த நிபுணத்துவ வழிமுறையிலேயே மனிதாபிமானப் போரை அவர்கள் முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

போரை நிறுத்துமாறு இலங்கைப் படையினரைக் கண்டித்தவர்கள், இன்று தமது பிரச்சினைகளைத் தீர்க்க எமது நடவடிக்கைகள் குறித்த ஆய்வு செய்கின்றனர். அதுபோலவே, எமது படையினரைக் கண்டிப்பவர்களும் மனம்மாறி அவர்களைப் பாராட்ட வேண்டும் என்றும் கோத்தாபய ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார்.இந்த நிகழ்வில், இலங்கைப் இராணுவத்தின் சிறப்புப் படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் ஹரேந்திர ரணசிங்க எழுதியுள்ள இந்த நூலின் முதற்பிரதியை, சிறப்புப் படைப்பிரிவின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சுமேத பெரேராவிடம் கோத்தாப ராஜபக்ஷ பெற்றுக் கொண்டார்

# ஆயுதங்களை மீடக நடவடிக்கை

நாடு முழுவதிலும் மறைத்து வைக்கப்பட்டுள்ள சட்டவிரோத ஆயுதங்களை மீட்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படடுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சட்ட விரோத ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருள் வர்த்தகத்தை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

காவல்துறையினர், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கூட்டாக இணைந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் அருகில் இருக்கும் காவல் நிலையம் அல்லது இராணுவத்தினரிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் பற்றிய தகவல்களை வழங்குமாறு காவல்துறையினர் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

# துமிந்த சில்வாவிற்கு சிங்கப்பூரில் சிகிச்சை

(கொழும்பு)

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து சிறி ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு சிங்கப்பூரில் சிகிச்சையளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.




வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் துமிந்த சில்வாவின் உடல் நிலையில் முன்னேற்றமில்லையென்று தெரிகிறது.மூளையின் செயற்பாடுகள் செயற்கையாக இடம்பெறுவதாலும், துமிந்த இன்னும் மயக்கமடைந்த நிலையில் இருப்பதாலும், சரியான முடிவுக்கு வர முடியாத நிலைமை இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

அவரது உடல் நிலையில் நரம்பியல் ரீதியான உணர்வுகள் ஏற்பட்டுள்ளதாகவும், செயற்கை சுவாச இயந்திரம் அகற்றப்பட்டு, தற்போது இயற்கையாக சுவாசித்து வருவதாகவும் சிறீஜயவர்தனபுர வைத்தியசாலை மருத்துவர்கள் தெரிவித்துள்ள போதிலும், அவரை வெளிநாட்டுக்கு அனுப்பி சிகிச்சை அளிக்கும் அளவிற்கு அவரது உடல்நிலையில் இன்னமும் மாற்றம் ஏற்படவில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

# பொருளாதாரம் சிறந்ததாக இல்லை குற்றம் சாட்டுகின்றார் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)



பங்குச் சந்தை பரிமாற்றத்திற்கு அமைய பொருளாதாரம் சிறந்த நிலையில் உள்ளதாக அனுமானிக்க முடியாதென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ராஜகிரியவிலுள்ள மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளார்.

பங்குச் சந்தையில் பங்குகளின் விலை அதிகரிக்கும்போது தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கும் என கருத முடியாது பெருந்தோட்டத் துறையிலுள்ள நிறுவனங்கள் கூடுதலான முதலீடுகளை மேற்கொண்டு நவீனமயப்பட வேண்டும் என பல வருடங்களாக கூறப்பட்டாலும் இதுவரை இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்றார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தொழிலாளர் கட்டளைச்சட்டம், தொழிலாளர் சட்ட விதிமுறைகளுடன் பொருந்தக் கூடியவாறு மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அனைவரும் உள்ளதாக கூறினார்

தற்போதைய உலக்கிற்கும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சட்டத்திட்டங்களுக்கு ஏற்றவாறு சட்ட மறுசீரமைப்புகளை மேற்கொள்வது தொடர்பாக தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்

# 60 மடிக்கணினிகளை திருடிய நால்வர் கைது

(கொழும்பு)

கெரவலபிட்டிய பகுதியில் 60 மடிக் கணினிகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் 4 சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.திருடப்பட்ட மடிக் கணினிகளின் பெறுமதி 7 மில்லியன் ரூபா என கணிப்பிடப்பட்டுள்ளது.

வத்தளை பகுதியில் வைத்தே சந்தேகநபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.வத்தளை நீதவான் நீதிமன்றில் இன்றைய தினம் சந்தேகநபர்களை ஆஜரபடுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மகிந்தவின் அரசியலை வெறுத்த சந்திரிகா தகவலை அம்பலப்படுத்துகிறது விக்கிலீக்ஸ்



(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் குடும்பம் நடத்திவரும் அரசியல் வெறுக்கத்தக்கது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.அமெரிக்க தூதுவர் பெற்றீசியா பியூட்டினியஸிடம் இந்த கருத்தை சந்திரிகா வெளியிட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் ராஜபக்சவின் குடும்பத்தை படிப்பறிவற்ற நாகரீகமற்றவர்கள் என்று சந்திரிகா குறிப்பிட்டதாக பியூட்டினியஸ் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு தெரிவித்துள்ளார்.இலங்கையின் அரசியல் சூழ்நிலை, அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் ராஜபக்சவின் அரசியல் ஒரு சாக்கடையாக உள்ளது என்று சந்திரிகா குறிப்பிட்டதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.விக்கிலீக்ஸ் தகவல்படி, இந்த கருத்துக்களை சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, 2009 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி பியூட்டினியஸிடம் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் ஊழல்கள் மலிந்துள்ளன.அரசியல் ஆரோக்கியமாக அமையவில்லை. இந்தநிலையில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் புகழை மஹிந்த ராஜபக்ச பாதிக்கச் செய்துள்ளதாக சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா, அரசியலில் பிரவேசித்தமை குறித்த தாம் ஆச்சரியப்படுவதாக குறிப்பிட்ட அவர், ஜனாதிபதி தேர்தல் நியாயமானதாக இருக்குமானால், பொன்சேகா நிச்சயம் வெற்றி பெறுவார் என்று சந்திரிகா கூறியுள்ளார்.பௌத்த தீவிரவாத கொள்கையை கொண்ட பொன்சேகா, மஹிந்தவை போலன்றி, தமது உறுதிமொழிகளில் இருந்து விலகிச் செல்ல மாட்டார் என்று சந்திரிகா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.இந்தநிலையில் நாடடு மக்கள் மாற்றம் ஒன்றை விரும்புவதாக சந்திரிகா, பியூட்டினியஸிடம் தெரிவித்துள்ளார்

# பாரத லக்ஷ்மனை துப்பாக்கியால் சுட்ட துமிந்த மெய்ப்பாதுகாவலர்களையும் சுடுமாறு கத்தினார்

## - சாரதி நீதிமன்றில் வாக்கு மூலம்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் கொலை தொடர்பில் துமிந்த சில்வாவின் உத்தியோகபூர்வ மெய்பாதுகாவலரான பொலிஸ் கான்ஸ்டபிள்ளை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அன்றைய தினம் அடையாள அணிவகுப்பை நடத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.மீஹிஹனை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் கான்ஸ்டபிள்ளான அநுர துஸார என்பரே விளக்கமறியல் உத்தரவை பெற்றவராவார்.

கொலை செய்யப்பட்ட பிரேமசந்திரவின் சாரதி சாந்த பெரேரா என்பவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டார்

இங்கு அவர் சாட்சியமளிக்கையில் பிரேமசந்திரன் வாகனத்தை தாம் அங்கொடை சந்திக்கு அருகில் செலுத்திக் கொண்டிருந்த போது, இரண்டு கார்கள் தம்மை பின் தொடர்ந்து வந்தன.

இந்தநிலையில் சுமார் 20 வாகனங்களுடன் எதிரே வந்த வாகன தொடரணி, தமது வாகனத்தை வல்பொல சிறிமாவோ பண்டாரநாயக்க நூலகத்துக்கு எதிர் திசையில் வைத்து இடைமறித்தது.

இதன் போது தமது வாகனத்தில் இருந்து பாரத லச்மன் பிரேமசந்திர இறங்கினார். அதேநேரம் துமிந்த சில்வாவும் தமது வாகனத்தில் இருந்து இறங்கி வந்தார்.இந்தவேளையில் இரண்டு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட போது துமிந்த சில்வா, பாரத லச்மன் பிரேமசந்திரவை அறைந்தார். இதன் காரணமாக பிரேமசந்திர கீழே வீழ்ந்தார்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, பாரத லச்மன் பிரேமசந்திரவின் தலையை நோக்கி துப்பாக்கி சூட்டை நடத்தினார்.அத்துடன் தமது மெய்பாதுகாவலர்களையும் பிரேமசந்திரவின் மீது துப்பாக்கி சூட்டை மேற்கொள்ளுமாறு அவர் சத்தமிட்டார்.இதன் போது அவர்களும் பிரேமசந்திரவின் மீது ரி56 ரக துப்பாக்கிகளினால் சுட்டனர் என்று பிரேமசந்திரவின் சாரதி தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

# ராஜ்ராஜரட்ணத்திற்கு 11 வருட சிறையும், அபராதமும்



இலங்கையைச் சேர்ந்தவரும் அமெரிக்கப் பிரஜையுமான ராஜ ராஜரட்னத்துக்கு 11 வருட காலச் சிறைத் தண்டனை நேற்று விதிக் கப்பட்டது. அத்துடன் பத்து மில் லியன் அமெரிக்க டொலர்களும் அப ராதமாக விதிக்கப்பட்டது. 54 வய தான ராஜ ராஜரட்ணம் அமெரிக்கா வில் பங்குச் சந்தையில் பிரபல வர்த்தகராக விளங்கியதுடன், உல கின் செல்வந்தர்களின் பட்டிய லில் 236வது இடத்தில் இருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது. சுமார் 63.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உட்சந்தை மோசடி செய்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அவர் பங்குசந்தையில் உட் சந்தை மோசடியில் ஈடுபட்டார் என கூறப்பட்டு, கடந்த 2009 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி எப்.பி.ஐ எனப்படும் அமெ ரிக்க மத்திய புலனாய்வுத் துறையி னரால் கைது செய்யப்பட்டு விசா ரணை நடைபெற்று வந்த நிலை யில் நியூயோர்க்கிலுள்ள மாவட்ட நீதிமன்றமொன்று ராஜரட்ணத்திற் கான தண்டனையை நேற்று அறிவித்தது.

# அயலவர்கள் கண்டித்ததனால் சிறுமி தற்கொலைக்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

தனக்குத்தானே மண்ணெண் ணெய் ஊற்றி எரிந்து தற்கொலை க்கு முயற்சித்த 12 வயதுச் சிறுமி பலத்த காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் 1.00 மணியள வில் இடம்பெற்ற இச் சம்பவத் தில் மாங்குளம் ஒலுமடு பகுதி யைச் சேர்ந்த பாலஸ்மிதா (வயது - 12) என்ற சிறுமியே இவ்வாறு தற்கொலைக்கு முயற் சியில் ஈடுபட்ட நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

தாயார் ஒலுமடுப் பகுதியில் சிறுகடை வைத்திருப்பதாகவும், வெளியே செல்லும்போது குறித்த சிறுமியைக் கடையில் நிறுத்தி விட்டுச் சென்றுள்ளார். அப்போது குறித்த சிறுமி கடையை விட்டு வெளியேறியதனால் அயலவர் கள் கண்டித்துள்ளனர். அதனைத் தாங்க முடியாத சிறுமி தனக்குத் தானே மண்ணெண்ணெய்யை ஊற்றி எரிந்திருக்கலாம் என சந்தேகிக்கப் படுவதாகத் தாயார் தெரிவித்தார்.

சிறுமியை உறவினர்களே கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் தாயார் தெரி வித்தார். (எஸ்)

### எல்லைகள்...

அவர் மேலும் தெரிவிக்கையில் எல்லைகள் மறுசீரமைப்பு என்று நிர்வாகச் செயற்பாடுகளில் மக் களுக்கு ஏற்படுகின்ற சிரமங்கள் குறைபாடுகளை தீர்க்கும் வகையில் ஒரு சீரான எல்லையினை மீள நிர்ணயித்துக் கொள்வதாகும். இதில் அதிகாரிகள் அரசியல் வாதிகளின் தீர்மானங்களுக்கு முக்கி யத்துவம் கொடுக்கப்படுவதில்லை. மாறாகச் சம்பந்தப்பட்ட மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். எனவே மக்களும் மக்கள் அமைப்பு பிரதிநிதிகளும் சமூக பொறுப்புடனும் தூரநோக்கு சிந்தனையுடனும் சுய விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் கருத்துக்களை முன்வைக்கவேண்டும்

சண்டிலிப்பாய் சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய், நல்லூர் ஆகிய பிரதேச சபைகளின எல்லை மறுசீரமைப்பு தொடர்பில் ஆட்சேபனைகள் இல்லாத எல்லை மறுசீரமைப்பு விடயங்கள் ஏற் றுக் கொள்ளப்பட்டதோடு வேறு சில எல்லை மறுசீரமைப்பு தொடர்பான இறுதித் தீர்மானம் மேற் கொள்வதற்கு குழு ஒன்றினை அமைத்து அதன் சிபார்சுக்கு அமைய முடிவுகள் மேற்கொள்ளப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் குழுவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரகுமார் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் பிரதேச சபை தலைவர்கள் எதிர்க்கட்சி உறுப்பி னர்கள் பிரதேச செயலகத்தின் அதிகாரிகள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக பிரதிநிதி கிராம அலுவலர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்படும் என்றும் அவர்கள் மறுசீரமைப்புக்கு உள்ளாகும் கிராமங்களுக்குச் சென்று மக்களின் கருத்துக்கள் விருப்பு வெறுப்புகளை அறிந்து சிபார்சுகளை முன்வைக்கவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த எல்லை மறுசீரமைப்பு தொடர்பான மக்கள் கருத்தறியும் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், பிரதேச செயலாளர்கள் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் கிராம அலுவலர்கள் மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# நால்வர் சுட்டுக்கொலை



(கொழும்பு)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சுட்டுக்கொல்லப்பட் டுள்ளனர். இச்சம்பவம் நேற் றிரவு உடவலவ, பணாறுடுவ பிரதேசத்தில் இடம் பெற்று ள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச் சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மெக்ஸி புரொ க்டர் தெரிவித்துள்ளார். இச் சம்பவத்தில் வர்த்தகர் ஒரு வரும் அவரது மனைவியும், அவரகளது இரண்டு பிள் ளைகளுமே சுட்டுக் கொல்லப் பட்டவர்களாவர நேற்றிரவு 7.40 மணியளவில் இவரகளின் வீட் டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த இனந்தெரியாத நபர்களே இவர்களைச் சுட்டுக்கொன்று விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

### வியட்னாம்...

ஒன்றும் இலங்கை வந்துள்ளது இன்றைய தினம் தாஜ் ஹோட் டலில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள வியட்நாம் இலங்கை வர்த்தக மன்றத்தில் வியட்நாம் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

### கூட்டமைப்பின்...

வைக்கும் வகையிலும், உயர் பாதுகாப்பு வயலங்களைத் தொட ர்ந்து பேணும் வகையிலும், அவசர காலச்சட்ட விதிகள் சிலவற்றை பயங்கரவாதத் தடைச்சட்டத்துடன் இணைக்கும் விதிமுறைகள் அடங் கிய வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி அண்மையில் வெளி யிட்டிருந்தார். இதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றம் அது அடிப்படையற்றது என்று கூறி விசாரணைக்கு ஏற்றுக் கொள்ள முடியாது என்று நிராகரித்துள்ளது.

### இணைந்து செயற்பட...

கதை ஒன்றைத் தயாரித்து பொய்யான குற்றச்சாட்டுக்களையே நிபுணர் குழு முன்வைத்துள்ளதென ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார். இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இலங்கை படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக ஐ.நா. நிபுணர்குழு தெரிவித்துள்ளது. இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சுமார் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக நிபுணர் குழு அறிக்கை தெரிவிக்கிறது. இந்த நிலையில் 1952 ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.நா.வுடன் இணைந்திருக்கும் இலங்கை மீது பாராபட்சம் காட்டாமல் ஐ.நா. செயற்பட வேண்டுமென ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கம் சவால்களை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களில் தேசியவாத அரசியல் கொள்கை களை பின்பற்றி வரும் பிரான்ஸ் ஒத்துழைப்பு வழங்கும் என திடமாக நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பிளவுபட்டுள்ள...

ஆகியோர் ஹோமகமவில் உள்ள அரச வங்கி ஒன்றில் வைத்திருந்த வைப்புக் கணக்குகளைச் தேசிய புலனாய்வுச் சேவை அதிகாரிகள் சோதனையிட்டுள்ளனர். இவர்களின் வங்கிக் கணக்கில் எவ்வளவு பணம் இருக்கிறது என்ற சரியான விபரத்தை அந்த அதிகாரி வெளியிடாத போதும், 2 மில் லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் இருப்பதாக கூறியுள்ளார். ஜே.வி.பி.யின் தலைமைக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள இந்த அணியினர் இது வரை சுமார் 6 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை பரப்புரைகளுக்காக செலவிட்டுள்ளதாகவும், ஜே.வி.பி.யின் வங்கிக் கணக்கில் இருந்து பெறப்படவில்லை என்றும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### முதற்கட்டமாக...

கோரிக்கை விடப்பட்டிருந்ததற்கு அமைவாக அத்தொகை 120 ஆக அதிகரிக்கப்பட்டது. இத் தொகையில் 40 பாடசாலைகளே முதற்கட்டமாக அடுத்த வருடம் அபிவிருத்தி செய்யப்படவுள்ள தாகவும் அவர் தெரிவித்தார். இவ் அபிவிருத்தித் திட்டத்தில் வடக்கில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள 40 பாடசாலைகளில் அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக கையொப்பம் இடப்படும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். நூலக மண்டபத்தில் நடைபெற்றது.


இந்நிகழ்வில் வடமாகாண ஆசிரியர் கல்விப் பிரிவுப் பணிப்பாளர் முரளிதரன், வடமாகாண கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர் ராபிக் ஆகியோர் கலந்துகொண்டு அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக ஆவணங்களில் கையெழுத்திட்டனர். அத்துடன் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களும் கல்வி யமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். மேலும் மிகுதியான பாடசாலைகள் 2013 ஆம் ஆண்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

### அரச அதிபரின்...

பலாலி ஆசிரியர் கலாசாலையில் இருந்து சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் யாழ். அரச அதிபரினால் தம்மீது சுமத்தப்பட்டிருக்கும் பாலியல் அவதூறுக் குற்றச்சாட்டைக் கண் டித்து மகஜர் ஒன்றை யாழ். செயலகத்தில் அரச அதிபரிடம் கையளிக்க வந்திருந்தனர்.


மாணவர்கள் செயலகத்திற்குள் பிரவேசித்து மகஜரைக் கையளிக்கத் தயாரானபோது அதனை ஏற் றுக்கொள்ள அரச அதிபரோ மேலதிக அரச அதிபரோ அங்கு இருக்கவில்லை ஏனைய அதிகாரிகள் அதனைப் பெற்றுக்கொள்ள பின்னடித்ததன் காரணமாக அங்கு சிறிது பரபரப்பு நிலவியது. அதன் பின்னர் கொழும்பில் உள்ள அரச அதிபருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து யாழ். செயலக நிர்வாக உத்தியோகஸ்தரைக் குறித்த மாணவர்களிடம் இருந்த மகஜரைப் பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபரினால் பணிக்கப்பட்டது. இதனை அடுத்து பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர் ஒன்றியத் தலைவர் கிளமனிடமிருந்து யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தர் கருணாகரன் மகஜரைப் பெற்றுக் கொண்டார். எனினும் பலாலி ஆசிரிய மாணவர்களின் யாழ். அரச அதிபரின் கூற்றுக்கு எதிரான போரா ட்டம் தொடர்வதாக பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர் ஒன்றியத் தலைவர் கிளமன் தெரிவித்தார் (பா,எஸ்)

அரசதிபர் ஜெனிவாவா ஆல்வந்த பின்னாலே கரவுடனே பார்த்துத்தான் கர்ஜிக்கிறார் - அரசவூழியர் மட்டத்தில் ஆனினம் மங்கையரைப் பெண்டாளும் திட்டத்தை கைவிடவே திட்டி!



# வெறுக்கத்தக்க செயற்பாடுகள் நெருக்கடிகளை ஏற்படுத்தலாம்

## எச்சரிக்கிறார் அமைச்சர் விமல்



(கொழும்பு)

அரசியல்வாதி ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு இன்னொரு மக்கள் பிரதிநிதி ஒருவரைக் கொலை செய்வது போன்ற வெறுக்கத்தக்க நிலை உருவாகுமாயின் சர்வதேசமும், எதிர்க்கட்சிகளும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இலங்கையிலுள்ள சட்டத்துக்கு அப்பால் சில அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர். கையில் கிடைக்கும் ஆயுதங்களினால், துப்பாக்கிகளினால் விலங்குகள் போல் மக்களைக் கொலை செய்கிறார்கள். இதனால் இந்த நாட்டில் நல்லதொரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முடியாது

குருநாகலில் இடம்பெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர், எந்த ஒரு கட்சிக்குள்ளும் அரசியல் முரண்பாடுகள் இருக்கலாம். இருப்பினும் ஒருவர் மீது ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு முன்னெடுக்கப்படும் அரசியலுக்கு நாம் தொடர்ந்தும் இடமளிக்கக் கூடாது. விடுதலைப் புலிகளைத் தோற்கடித்துப் பெற்ற வெற்றியை பாதாள உலக அரசியல்வாதிகளால் மழுங்கடிக்க இடமளிக்கக் கூடாது எனவும் கூறினார்.

## டிசம்பருக்கு முன்னர் உயர்தரப் பெறுபேறுகள்

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்வரும் டிசம்பர் மாத பாடசாலை விடுமுறைக்கு முன்னதாக வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2001ஆம் ஆண்டின் பின்னர் இம்முறை புதிய மற்றும் பழைய பாடவிதானங்களின் அடிப்படையில் பரீட்சை நடைபெற்றது.

உயர்தரப் பரீட்சையின் பிரதான பாடங்களுக்குரிய விடைத்தாள் மதிப்பீடுகள் ஏற்கனவே முடிவடைந்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் தோற்றியிருந்த பாடங்களின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஐ.தே.க. இருவர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான புத்திக பத்திரன மற்றும் ஐ.தே.க மேல்மாகாண சபை உறுப்பினரான ஹிரால் லக்திலக ஆகியோரின் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்துவத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதென கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது இவர்கள் இருவரும் செயற்பட்ட விதம் தொடர்பில் கட்சியின் செயலாளர் நாயகத்துக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தின் போது இவர்கள் இருவரும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்காமல் சுயேட்சைக் குழுக்களுக்கு ஆதரவு வழங்கியிருந்தனர் என இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இது குறித்து கட்சி மட்டத்தில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## அரசின் வேலைத்திட்டத்தை பாராட்டுகிறது 'யுனெஸ்கோ'



(பாரிஸ்)

பொருளாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளின் அபிவிருத் திக்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள வேலைத் திட்டம் வர வேற்கத்தக்கது என்று யுனெஸ்கோ அமைப்பு தெரிவித்துள்ளது.

யுனெஸ்கோ அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஐரினா போகோவா இவ்வாறு அரசைப் பாராட்டியுள்ளார்.

பாரிஸ் நகரில் உள்ள யுனெஸ்கோ அமைப்பின் தலைமை யகத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸை சந்தித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்

பயங்கரவாதம் தோற்கடிக் கப்பட்டதன் பின்னர் இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் சிறந்து காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பின்போது, இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் யுனெஸ்கோ அமைப்பின் பணிப்பாளர் நாயகத்திற்கு விளக்கியுள்ளார்.

## பதில் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம்

அரசாங்கப் பாடசாலைகளில் பதில் அதிபர்களாக நீண்டநாட்களாகக் கடமையாற்றி வருகின்றவர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழுங்குவது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வல்ல தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் உள்ள பெரும்பாலான அரசாங்கப் பாடசாலைகளில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் பதில் அதிபர்களாக நீண்ட நாட்களாக கடமையாற்றி வருகின்றார்கள். இவர்களை அதிபர்களாக நியமிப்பதில் பல சிக்கல் நிலைகள் தோன்றி உள்ளன.

நீண்ட நாட்களாக பாரிய அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் இவர்களுக்கு அநீதி இழைக்கப்படக் கூடாது என்பதில் ஜனாதிபதி தீவிர கவனம் செலுத்தி வருகின்றார்.

கூடியவிரைவில் இவர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்காக ஜனாதிபதி தமது முழுக்கவனத்தையும் செலுத்தி வருவதாகவும், அதன்படி பதில் அதிபர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் கிட்டக் கூடிய வாய்ப்பு நெருங்கி வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## யுத்தக்குற்ற விசாரணைகளை புலிகளின் நண்பர்களே வலியுறுத்து




(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் நண்பர்களே யுத்தக் குற்றச் செயல் தொடர்பான விசாரணைகளை வலியுறுத்தி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார். திரிபுபடுத்தப்பட்ட ஓர் ஆவணப்படத்தின் அடிப்படையில் இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றச் செயல் விசாரணை தொடர்பில் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சனல் - 4 ஆவணப்படம் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றில் சனல்-4 ஆவணப் படம் காட்சிப்படுத்தப்படவுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் மீது மட்டுமே யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும், இதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சட்டவிரோத ஆயுதக்களைவு நேற்றுமுதல் அமுலுக்கு வந்தது



அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்காக தனியார் பாதுகாப்பு ஊழியர்களை பயன்படுத்துவதையும் அனுமதிக்கப்படாத ஆயுதங்களைப் பயன்படுத்துவதையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அரசாங்கம் தடைசெய்துள்ளதாக அரசாங்கப் பேச்சாளரான அமைச்சர ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,சட்டவிரோத ஆயுதங்களைக்களையும் நடவடிக்கை நேற்று முதல் அமுலுக்கு கொண்டு வரப்படுகிறது.

கடந்த 30 வருடகாலமாக நாட்டில் துப்பாக்கி கலாசாரம் நிலவிவருகின்றது. பலதரப்பட்ட அரசாங்கங்களின் ஆட்சிக் காலங்களின்போது பலதரப்பட்ட காலகட்டங்களில் நாட்டில் அசாதாரன சூழ்நிலை நிலவியது.

இதன்போது பெரும் எண்ணிக்கையிலான அமைச்சர்கள் உட்பட அரசியல் தலைவர்களும் பிரமுகர்களும் படுகொலை செய்யப்பட்டனர். இதன் காரணமாக தமக்குத்தாமே பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அரசியல் தலைவர்களுக்கு ஏற்பட்டது.

அவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பல தரப்பைச் சேர்ந்தவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்த மாற்றம் மோசமான சம்பவங்களை இடம்பெறச் செய்யவும் வழி வகுத்தன. அதற்கு ஏதுவாக அரசியல் கலாசார மாற்றம் தேர்தல் முறை மாற்றம் போன்றவை அமைந்தன.

முல்லேரியா சம்பவத்தை மிகவும் மோசமான ஒரு சம்பவமாகக் கருதி அது குறித்து அரசாங்கம் தீவிரகவனம் செலுத்தி வருகின்றது. நாட்டில் தற்போது அமைதியுடனான சமாதான சூழல் நிலவுகின்றது. துப்பாக்கிக் கலாசாரத்தை அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

நாட்டு மக்களுக்கு நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் சட்ட விரோத ஆயுதங்களைக் களைவதற்காக விஷேட நடவடிக்கை ஒன்றை உடன் அமுலுக்கு வரும் வகையில் நேற்று முதல் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக பல குழுக்களையும் அரசாங்கம் அமைத்துள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஆர்.துமிந்த சில்வா கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினரே தவிர அவர் ஜனாதிபதியின் ஆலோசகர் அல்ல எனவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

## பாரதவைக் கொன்றவருக்கு பூரண பாதுகாப்பு அளிப்பு

### கூறுகிறார் பொன்சேகா

(கொழும்பு)

முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவைச் சுட்டுக்கொன்ற நபருக்கு தற்போது அரசாங்கம் பூரண பாதுகாப்பை வழங்கியுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். வெள்ளைக் கொடி விவகார வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர் நீதிமன்ற வெளி வளாகத்தில் வைத்து இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் என்னை தற்கொலைத் தாக்குதல் நடத்திக் கொலை செய்ய முயற்சித்து காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது இராணுவத் தளபதியான எனக்குக் கூட இவ்வாறான பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்றும் அவர் கூறினார.

## 2 பிள்ளைகளின் தந்தை தூக்கிலிட்டு உயிரிழப்பு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மாலை தூக்கிலிட்டு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்த சுகுமார் சிவநாதன் (வயது-46) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவ தினத்தன்று மதுபோதையில் இருந்த அவர் சிறிது நேரத்தில் தனது வீட்டின் அறையில் நைலோன் கயிற்றின் மூலம் தூக்கிலிட்டு உயிரிழந்தார். இந்த நபர் அடிக்கடி தனது மனைவியுடன் சண்டை பிடித்து வருபவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் நீதவான் ஜெகநிதிபாலன விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இந்த நபருக்கு 2 பெண் பிள்ளைகள் உள்ளனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எப்.எஸ், எஸ்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.